உ

கடவுள் துணை.

இவளும்

சட்சாரியா

முதற்பாகம்.

இது,

களத்தூர், முத்தமிழ்ப்புலவர்

வேதகிரி முதலியார்

பௌத்திரர்

க. சண்முக முதலியாரால்

இயற்றப்பட்டது.

சென்னை: விநோத விகடன் பத்திராதிபர்

ஆ. ப. வை. சோதண்டராமபாண்டிய நாடார்

அவர்களால்

விநோத விகடன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1924.

ரைட்] [விலை அணா—8.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
5- DEC 1924
MADRAS

Y15
N24.1
85689

விநோத விகடன் புத்தகசாலை.

பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை.

கூந்தல் வளரும் எண்ணை.

உங்கள் தலைமயிர் நன்றாய் வளரவேண்டுமானால்மேலேகாட்டியுள்ள எண்ணையை வாங்கி உபயோகியுங்கள். இது மயிரை உதிர்க்காமலும் அடர்த்தியாயும், மிருதுவாயும் கருநிறத்துடனும் வழவழப்பாயுங் கூந்தலை வளர்க்கும் மனதிற்கும் சுகந்தமான வாசனையைத் தரக்கூடியதுஇதைப் போன்ற உயர்ந்தத் தைலத்தை இது வரையிலும் உபயோகித்திருக்க மாட்டீர்களென்பது உண்மை

மேற்படி எண்ணையை உபயோகித்தால் தலையில் சுண்டுபேன் முதலியவைகளை சேரவொட்டாது. மயிர் உதிர்ந்த வழுக்கையான அதாவது மொட்டையாயுள்ள இடங்களிலும் மயிரை முளைக்கச் செய்யும் மயிர்க்கால்களுக்கு நல்ல குளிர்ச்சியைத்தரும் மூளைக்கு உஷ்ணம் அணுகாதபடி கார்க்கும் இதை உபயோகிப்பதால் ஜல தோஷம் முதலியவைகள் பறந்துபோம் மயிர் நுனிகளின் வெடிப்பையும் செம்பட்டை நிறத்தையும் போக்கிக் கருநிறமாக்கும். இதை அனைவரும் உபயோகித்துப் பலருக்கும் இதன் உத்தம குணத்தைக் கூறும்படி வேண்டுகிறோம். ஒருதரம் இதை உபயோகித்தால் மறுபடியும் ஸ்நானம் செய்யும் வரையில் இதன் உயர்ந்த பரிமளம் நீங்காது. ஒரு புட்டி தைலம் விலை ரூபா—1

உ

கடவுள் துணை.

இவளும் சம்சாரியா

முதற்பாகம்.

இது,

களத்தூர்: முத்தமிழ்ப்புலவர்

வேதகிரிமுதலியார்

பௌத்திரர்

க. சண்முக முதலியாரவர்கள்ளால்

இயற்றப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
5-DEC 1924
MADRAS

சென்னை: விநோத விகடன் பத்திராதிபர்

ஆ. ப. வை. கோதண்டராமபாண்டிய நாடார்

அவர்களால்

விநோத விகடன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1924.

ரிஜிஸ்டர் காபிரைட்] [விலை அணா—8.

உ

கடவுள் துணை.

இவளும் சம்சாரியா.

காப்பு.

ஓதவினையகலும் ஓங்குபுகழ்பெருகும்
காதற்பொருளனைத்தும் கைக்கூடும்—சீதப்
பனிக்கோட்டுமால்வரைமேல் பாரதப்போர்தீட்டுந்
தனிக்கோட்டுவாரணத்தின் தாள்.

பொற்புதவிர்மாதர்களைப் போற்றனலமன்றகமே
கற்புமிகுமாதர்க்கழலேற்றி—நற்புவியிற்
குற்றமிலன்னோர்புகழைச் கூறமுனஞ்சிவனார்
பெற்றசுதனைங்கரனைப் பேசு.

கற்பு என்னும் ஆபரணம் ஒன்றையே அணிகலமாகக்கொண்டு பதி பக்தியுடன் இல்லறம் நடாத்தி வருகின்ற நாரீரத்தினங்களின் செந்தாமரை மலர்போன்ற சிவந்த பாதங்களைப்போற்றி நாள்தோறும் பொறுமை ஒன்றையே ஆபரணமாகக் கொண்டு குண்டுணியைப்போல் தாண்டுகால் போட்டுக்கொண்டு,

"ஊரெல்லாஞ்சுற்றி, என்பேர்முத்தி"

என்று வம்பு வார்த்தைகளை அளக்கின்ற துஷ்டகுணமுள்ளப் பெண்டுகளைத்தூற்றி, இந்தச் செழுமையாகிய உலகத்தில் ஓர் நூலைச்சொல்லுதற்குத் தன்னிடத்தில் நம்பிக்கைவைத்து நாள்தோறும் வணங்கித் துதித்தவர்களுக்கு மூன்று தமிழையும் கொடுக்கும்படியான துப்பிக்கையையுடைய விநாயகக்கடவுளை நாம் எடுத்துச் சொல்லும் நூல் இனிது முடியும் பொருட்டு வணங்குதல் செய்வாம்.

நூல்.

என்னேகிரேதகத்தி ரேணுகையேகூற்றுவனும்
தன்னேர்திரேதகத்தில் சானகியே—பின்யுகத்தில்
கூடுந்துரௌபதையே கூற்றுங்கலியுகத்தில்
வீடுதோறுங்கூற்றுவனுமே.

என்றபடி, கிரேதாயுகத்தில் ஜமதக்கினி முனிவருடைய தேவியும், பரசுராமருடைய தாயாருமான ரேணுகையம்மனால் உலகமழிந்தது, திரேதாயுகத்தில் உலகமாதாவாய சீதாதேவியால் கருமையாகிய கடலைப்போலுள்ள கொடிய ராக்ஷசக் கூட்டமெல்லாம் அழிந்து சகல தபோதனர்களுக்கும், பிரமஞானிகளுக்கும் நன்மையுண்டானது, துவாபரயுகத்தில் பாஞ்சால எக்யத்திலுதித்து பாண்டவரை மணந்தத் துரௌபதா தேவியால் துரியோதனாதியர்கள் தங்களுடைய கூட்டமான பதினொரு அக்ரோணி சேனையுடன் ஒழிந்து பூமிபாரங்குறைந்து உலகம் சுகாப்தமானது. இக்கலியுக மழிகின்றதற்கோ அவாளைப்போல் சக்திவாய்ந்த ஸ்திரீ ரத்தினங்கள் வேண்டியதில்லை: மேலும், அவர்களெல்லாங்காரணமின்றி உலகத்தை அதஞ்செய்தவர்களல்ல. உலக இம்சையை ஒழிக்கும்பொருட்டே அவதரித்துத் தங்கள் பதிவிரதா தன்மையையும், புகழையும் நிலைநாட்டி நன்மைக்கே அழிவு செய்தார்கள். இப்போதோ ஒவ்வொரு வீட்டிலும் பெண்ணென்று பேர்வைத்துக்கொண்டு நடைப்பிணம்போல் உலவுகின்ற சண்டிமுண்டைகளாலேயே அழிந்துவிடுமென்பதற்கு ஆக்ஷேபனையுமுண்டோ? பெண் என்றால் எப்படியிருக்கவேண்டும்?

அன்னைதயைய்யு மடியாள்பணியுமலர்
பொன்னின்ஞெளியும்புவிப்பொறையும்—வன்னகலை
வேசிதுயிலும விறன்மந்திரிமதியும்
பேசிலிவையுடையாள் பெண்.

என்னும் வாக்கியத்திற் கிணங்க, புருஷனுடைய சவரக்ஷணையில் தாயாரைப்போன்ற அன்பும், பணிவிடையில் அடியாளைப்போன்ற பயபக்தியும், அழகில் செழுமையாகிய மலரில் வாசஞ்செய்யும் ஸ்ரீதேவியைப்போன்ற அழகும், பொருமையில் எல்லாவற்றையும் பொருத்து நலங்கொடுக்கும் படியான பூமிதேவியைப்போலவும், புருடனிடத்தில் கேளிக்கையான காலங்களில் கேவலம் வேசியைப் போன்ற உல்லாசமும், ஆபத்துக்காலங்களில் மந்திரியைப்போ

ன்ற புத்தியும் பொருந்தி, நாணம் - மடம் - அச்சம் - பயிர்ப்பு என்னும் நான்கே ஒருருவாய்த் திரண்டதோ என்று உலகோர் வியக்கும்படிப் பேரெடுக்கின்றவளே யல்லவோ மனையாட்டி யென்றும், இல்லக்கிழத்தி யென்றும், ஆசைக்கிழத்தி யென்றும் சொல்லுவர். அதற்காகவே மூன்னோர்களும்,

கணவனுக்கினியளாய் மிருதுபாஷியாய்மிக்கக்
கமலைநிகர் ரூபவதியாய்
காய்சினமிலாளுமாய் நோய்பழியிலாததோர்
கால்வழியில் வந்தவளுமாய்
மணமிக்கநாணமட மச்சம்பயிர்ப்பென்ன
வருமினிய மார்க்கவதியாய்
மாமிமாமர்க்கிதஞ் செய்பவளுமாய்வாசல்
வருவிருந்தோம்பு பவளாய்
இணையின்மகிழ்நன்சொல்வழி நிற்பவளுமாய்வந்தி
யெனும்பெயரிலாத வளுமாய்
இரதியெனவேலீலை புரிபவளுமாய்பிறர்தம்
இல்வழி சேலாத்வளுமாய்
அணியிழையொருத்தியுண் டாயிலவள்கற்புடைய
ளாகுமேமதருமை மதவேள்

என்று வியந்து கூறியிருக்கின்றனர். இதுவுமன்றி.

ஸ்திரீகளுக்குத் தெய்வபக்தியைக் காட்டிலும்புருஷபக்தியே விசேஷமானது. சகல பந்தங்களிலும் புருஷபந்தமே அதிலும் விசேஷமானது என்று மூன்னோர்கள் கூறினர். அதற்குத் திருஷ்டாந்தமாக ஸ்திரீகள் தங்களுக்கு விவாகமானவுடனே தன் தாய், தந்தை, சகோதரர், சுற்றத்தார் முதலிய பந்துக்களையும், பிதுரார்ஜிதமான சொத்துக்களையும் விட்டுவிட்டு, புருஷனுக்கும், அவனுடைய சொத்துக்களுக்குமே பெரிது மூவக்கின்றனர். ஆகையால் பத்தாவிடத்தில் பரிபூரணநேசம் வைக்கவேண்டியது பத்தினியினுடைய மாறுத கடமையாயிருக்கின்றது. எவளொருத்தி கணவனுடைய இஷ்டப்பிரகாசம் நடக்கின்றுளோ அவளுக்குச் சர்வாபீஷ்டமும் நிர்விக்கினமாகச்சித்தியாகுமென்பதுதிண்ணம். தவிர,

உலகமானது எப்படி யிருக்கின்றதென்றுல் ஒன்றைக்கொடுத்து ஒன்றை வாங்குகின்ற வர்த்தகர்களுக்குச் சமானமாயிருக்கின்றது. எப்படியென்றுல், நமக்கு மரியாதை வேண்டுமானல்

நாம் நம்முடைய மரியாதையைக்கொடுத்து இன்னொருவர் மரியாதை வாங்கவேண்டும், பிரியம் வேண்டுமானல் நம்முடைய பிரியத்தைக்கொடுத்துப் பிரியம் வாங்கவேண்டும், சண்டை வேண்டுமானல் நம் வாயைக்கொடுத்து எதிரியின் வாயைக்கிளறி சண்டை வாங்கவேண்டும். சிநேகிதம் வேண்டுமானல் நம்முடைய பணத்தைச்சிலவழித்தால் அளவில்லாத சிநேகிதர்கள் போட்டிப்போட்டுக்கொண்டு மேல்விழுந்து முகஸ்துதி பேசி சிநேகிப்பார்கள், இதை யோசிக்குங்கால் கடையில் காசைக்கொடுத்துப் பலவித காய் கறிகளையும், தான்யங்களையும் வாங்கிக் கொள்ளுகிறமாதிரி நம்மிடத்துள்ள ஓர் வஸ்துவைக்கொண்டுதான் இன்னொருவஸ்துவை வாங்க வேண்டும். அதுபோல ஸ்திரீகளும், தங்களிடத்தில் ததும்பியிருக்கின்ற அன்பு யென்னும் மதுவை நாயகனுகிய புருஷனிடத்தில் சுழலுகின்ற வண்டிற்குச் சமர்ப்பிப்பார்களாகில் இருவருயிரும் ஒருயிரேபோல் இருக்கவும் வேறு அத்தாக்ஷிவேண்டுமா? சகல விஷயங்களிலும் புருஷனுடைய எண்ணப்படி பெண் நடக்கும் பக்ஷத்தில் பெண் எண்ணப்படி புருஷனும் நடப்பான். இதற்காக வல்லவோ,

எப்பணியாலின்புறுவர் காதலரக்காதலரை
அப்பணியாலப்போழுதே யன்புறுத்தி—யோப்பரா
மனங்குழையும்வண்ண மகிழ்விப்பதன்றே
கனக்குழையார்தங்கள் கடன்:—என்றார் பெருந்தேவனாரும். இது தவிர,

குடும்பத்திற்குப் புருஷன் எஜமானனுயிருந்தாலும் ஒரு சமயத்தில் புருஷனுக்குப் பெண்சாதியே எஜமானத்துவம் வகிக்கிறாள். அது எப்படியெனில், குடும்பமாகிய சாகரமென்னுங் கடலினுடைய அலையை சம்பாதனை யென்னும் பொருளைக்கொண்டு அடக்கிக் கரையேறுவதினல் புருடன் குடும்பத்திற்கு எஜமானனுகிறான். பெண்ணே! வருவாயில்லாவிட்டாலும் பதி பக்தியுடனே நாயகனுடைய பஞ்சேந்திரியங்களையும் கவரும்படியாய் எந்த சமயம் எப்படி நடக்கவேண்டுமோ அந்த சமயம் அவனுடைய வரம்பு கடவாது நடந்து அவனுடைய அருளைப் பெறுவதினல் ஒவ்வொரு சமயம் பெண்சாதியின் ஏவலின்படி புருஷன் நடப்பதும் சாதாரணமான உலக வழக்கமே! அதினல் புருஷனுக்குப் பெண்சாதி எஜமானியாகிறாள். புருஷன் எப்படிப்பட்ட அந்தஸ்துடையவனு யிருந்தாலும் அவன் ஒரு எஜமானுக்கோ அல்லது பல எஜமானுக்கோ அடங்கி நடப்பதல்லாது அதில் பல கஷ்டங்களும், பல விரோதங்களும் சகஜமாகவே உண்டாவதினல் அவ

னுக்குத்தன்னையறியாமலேயே கோபம்வரக் காரணமிருக்கின்றது அந்த சமயத்தில் பெண்சாதியானவள் சிம்ம சொப்பனங்கண்ட யானையைப்போல் நடுநடுங்கி ஒதுங்கிப்போகாது எதிர்த்து நிற்க கூடாது. அப்படி எதிர்த்து நிற்பதினால் காற்றுடன்கூடிய அக்கினி என்னபாடு படுமோ அதைப்போல அந்தக்கோபமென்னுங் காற்றானது இவள்பேரில் குதித்து வீசும்படி நேரிடுகின்றன. இதற்கு திருஷ்டாந்த மென்னவென்றால், பிரசண்டமாருதம் ஓங்கி வீசும்போதும், ஜலப்பிரவாகம் வரும்போதும் வளைவின்றி இருமாப்புடன் எதிர்த்து நிற்கும் விருக்ஷங்களெல்லாம் அடியோடு தரைமட்டமாய் முறிந்து விழுகின்றன, நிமிராது வளைந்து தங்கள் எழ்மைத்தனத்தைக் காட்டுகின்றச் சிறிய செடிகொடிகளெல்லாம் எண்ணுஞ் சிரஞ்சீவியாய் வாழுகின்றன, அதைப்போலவே புருஷன் சீறிய பொழுது ஸ்திரிகள் தங்கள் எழ்மைத்தனத்தைக் காட்டிக் கெஞ்சுவதுபோல வணங்கி நடக்கவேண்டும். அதை விட்டு விட்டு நீ மாத்திரம் என்ன? ஆகாயத்திலிருந்து குதித்து விட்டாயோ! கூழுக்குமாங்காய் தோற்காது என்று உனக்குத்தெரியாதா? அறிவுகெட்டவனே! என்று அவன் வாய்திரவாததற்கு முன்னமே அட்டவணையாக,

"வந்ததுசண்டை இறக்கடிகூடை"

என்று சண்டைக்கு ரணபத்திரகாளியாய்த் துடையைத்தட்டி எமனைப்போல எதிர்த்து நிற்பவளும் சம்சாரியா?

"கொழுநனுண்டபின் றுனுகர்கொள்கையும்
விழிதுயின்றபின் றுஞ்சலுமேன்துயில்
எழுவதற்குமுன் னெழுதலுமேயன்றே
பழுதில்கற்புடைப் பாவையற்செய்கையே."

என்னும் வாக்கியப்படி ஸ்திரீகள் புருஷனுடைய சொல் தவறாது நடக்கவேண்டும். அப்படி நடந்தவர்கள் கற்பரசிகளாகிய அருந்ததி, நளாயினி, அகலிகை, தமயந்தி, சந்திரமதி முதலிய பல பதிவிரதா சிரோன்மணிகள் இருப்பினும், முக்கியமான புருடார்த்தங்களை உலகோர்களுக்குக் கற்கண்டின் பாகைப்போல் கொடுத்தருளிய நமது நாயனாரின் கிழத்தியாகிய வாசுகி அம்மனை மாத்திரம் நாம் முன்னதாக எடுத்துக் கொள்ளுவோம்.

வாசுகி அம்மனோ மகாபதிவிரதை, நாயனாரோ சத்தியத்திற்குப் பொக்கிஷம். இவர்களிருவரும் இல்லறம நடாத்திவருங்காலத்தில், நாயனர் எத்தொழிலைச் செய்தாலும் பாபமானதென்று நினைத்து நெசவு தொழிலையே மேற்கொண்டார். மேற்கொண்டும்

அதிகமான பணஞ்சம்பாதித்து ஆஸ்திசேர்த்தாரா? அல்லது நல்ல நாணயமாகிய ஆடையாபரணங்களைத் தரித்தாரா? அதிலெல்லாம் பாபத்திற்கு ஏதுவான காரணம் உண்டாகுமென்று ஒரு நாளைக்கு ஒரு முழத்திற்குமேல் நெசிவு செய்வதே கிடையாது. அதைக்கொண்டுபோய் கடைவீதியில் விற்று அதில் வரும் ஊதியத்தைக்கொண்டு மனமகிழ்ச்சியுடன் இருவரும் இல்லறம் நடாத்திவருங்கால், ஓர்பொழுது கொங்கணவநாயனார் தவத்தைவிட்டு நகரத்திற்கு வரும்போது ஆகாயத்தில் பறந்த ஓர் கொக்கானது தன்மேல் எச்சமிடக்கண்ட கொங்கணவர் கோபாக்கினியால் அதை யுற்றுநோக்க, பகீலென்று அது எரிந்து விழுந்தது. அதை பார்த்தத் தபஸி ஆ! ஹா!! நம்முடைய தபத்திற்கு யாரும் நிகர் இல்லையன்றோ! நாம் இத்துணைக்காலம் கஷ்டப்பட்டு வருந்தியதற்குக்கூலி கரதலாமலகம்போல் விளங்கிற்று. என, இறுமாப்புடன் பதிவிரதா பிக்ஷைக்காகப் போம்பொழுது நாயனார் வீடு தாளிட்டிருக்க மற்ற வீடுகள் திறந்திருக்கப் பிக்ஷையேற்றுப் போயினா இப்படி நாளுக்கு நாள் பதிவிரதா பிக்ஷையேற்று வருங்கொங்கணவர் ஓர் நாள் நமது நாயனார்வீடு திறந்திருக்கக் கண்டதும் பிக்ஷைக்காகத் தமதுகையை மூன்றுவிசை தட்டினார். அதுசமயம் பதிவிரதா ரத்தினமாகிய வாசுகியம்மன் நாயனாருக்கு மெல்லென பாதம்வருடிக் கொண்டிருந்தாள். அந்த சமயந்தான் கொங்கணவரும் கைதட்டினது. அம்மனானவள் நாயகன் உத்திரவை எதிர்பார்த்திருந்தாள். அதனால் சற்று காலதாமதமானது. உடனே நாயனார் வந்த அதிதிக்குப் பிச்சைப்போடும்படி உத்திரவளிக்க, அதையேற்ற வாசுகியம்மன் பிச்சைக்கொண்டு வந்தனள். இதற்குள் கொங்கணவருக்குக்கோபம் பொருக்காது அம்மனை உற்று நோக்கவே அதைப் புருஷபக்தியால் தெரிந்த அம்மன் கோபத்துடன்;

"கோக்கேன்று நினைத்தனையோ"

என்னையும் என்றாள்.

இவ்வார்த்தையைக் கேட்ட கொங்கணவர் திடுக்கிட்டு, நாம் வருகிறவழியில் கொக்கை யெரித்தது வீட்டிலுள்ள இவ்வம்மைக்கு எங்ஙனம் தெரியும்! என்று திகைத்து, ஆ! ஹா!! பதிவிரதையென்றால் இப்புண்ணியவதிக்கே தகும். இல்லறத்தி லிருந்துக் கொண்டே இவ்வளவு ஞானத்தையும் உட்கொண்டிருந்தால் இவளுக்கு நிகர் யாரைச்சொல்லலாம்? இவளுக்கு இருக்கும் ஞானத்தில் நாலில் ஒரு பாகங்கூட நமக்கு இல்லையே! இதற்கே நாம் எவ்வளவோ மகிழ்ந்து விட்டோமே! இல்லறத்தைக் காட்டிலும் துறவரமே பெரிதென்று அல்லவோ நாம் ஆகாயக்கோட்டைக் கட்டி

னேம்! நம்முடைய அகங்காரமெல்லாம் ஓர் பெண்ணரசியெதிரில் சூரியனைக்கண்ட பனிபோல் விலகிவிட்டதே! அதிலும் இன்னம் நாம் ஆராய்ந்தால் துறவரம்பெரிதா? இல்லறம்பெரிதா? என்று நமக்கு விளங்கவில்லையே! என்று தன் மனதைப்பலவாறு ஆராய்ந்தும் விளங்காமல் கடைசியாக நமது நாயனாரையே கேட்டுத் தெளியவேண்டுமென்று மறுநாள் காலையில் நாயனாரைக்கண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து வணக்கத்துடன் தபோதனரே! உலகத்தில் இல்லறம் பெரிதா? துறவரம் பெரிதா? என்று கேட்டார். அதற்கு நாயனார் அப்பா! நாளைக்குச் சொல்லுகிறேனென விடைபகர்ந்தனர். இவரும் சரியென்று அன்றையதினங் கழித்து மறுதினம் வந்தார். அதற்கும் நாயனார் நாளைக்கென்றார். அவரும் மறுதினம் வந்தார். இவரும் நாளைக்கென்றார். இப்படியே வருடம் ஒன்றாகியும் கொங்கணவர் சளையாது நடந்து வந்தார். நாயனாரும் சளையாது நாளைக்கென்றசொல்லை மறக்கவேயில்லை. இப்படியிருக்க, ஓர் நாள் நமது கோபசிகாமணியாகிய கொங்கணவருக்குக் கோபமானது மேலெழும்பி நாம் சுமார் ஒண்ணரைவருடகாலமாக நடந்தும் இவர் நாளைக்கு நாளைக்கு என்கிறார். நாளைக்கு என்கிறது நமனுடையநாளா? அல்லது நம்முடைய நாளா? சொல்லுகிறதாயிருந்தால் சொல்லவேண்டும். அல்லது, முடியாதென்று விட்டுவிடவேண்டும் அதை இரண்டிலொன்று இன்றைக்கு தெரிந்துகொண்டு நம்முடைய வழியை நாம் பார்க்கவேண்டும் என்று எப்போதும்போல் நாயனாரிடம் வந்து உட்கார்ந்தனர். அதுகால் நெசவு செய்துக்கொண்டிருந்த நாயனார் இவருடையமுகக்குறிப்பை யுணர்ந்து நல்லதென்று மனதிற்பதிந்து ஒன்றுந்தெரியாதவரைப் போல் மனைவியை விளித்துப் பெண்ணே! இழை அறுந்துவிட்டபடியால் விளக்குக் கொண்டுவாவென்றார். அதற்கு அம்மன் மாறு சொல்லாது விளக்குக் கொண்டுவந்தார். அவ்விந்தையைக் கொங்கணவரும் பார்த்திருந்தார். சிலநாள் கழித்து ஓர் நாள் வாசுகி அம்மனவள் கிணற்றில் ஜலம் சேந்திக்கொண்டிருந்தபோதும் ஏதோ காரணார்த்தமாக நாயனார் கூப்பிட அம்மனவள் அரைக் கிணற்றிலேயே தோண்டியையும், கயற்றையும் விட்டுவிட்டுவந்து நாயனார் பணிவிடையைச் செய்துவிட்டு மறுபடியும் போய்ப்பார்க்கும்போது தான் எம்மாதிரி விட்டுவந்தார்களோ அம்மாதிரியே தோண்டியும், கயறும் நிற்கக்கண்டும் அம்மையார் ஆச்சரியப்படாது ஜலத்தைக்கொண்டு தம் வீட்டுக்காரியங்களை நடத்திக்கொண்டனர் சிலகாலஞ் சென்றதும் ஓர் நாள் நாயனாரும், கொங்கணவரும் ஸ்நானபானஞ்செய்து போஜனத்திற்குக் குந்தினார்கள். அம்மன் வாழையிலையைப்போட்டு இருவருக்கும் பழையசாதம் பறிமாறி வெஞ்சினமும்வைத்து உண்ணும்படி உபசரித்தார் அதுசமயம் நமது நாயனார் பெண்ணே! சாதம் சுடுகையா யிருக்

கின்றது விசிறி கொண்டுவா என்றனர். அம்மனும் எதிர்சொல்லாது விசிறிகொண்டுவீச இருவர் சாதத்திலும் குபுகுபுவென்று ஆவிகிளம்ப. இருவரும் போசனஞ்செய்து முடித்துக்கொண்டதும் கொங்கணவரானவர் இங்ஙனம் நடந்த அதிசயத்தைப்பார்த்து, பெருமூச்செறிந்து, அடடா!

பத்தாவுக்கேற்றப் பதிவிரதையுண்டானல்
எத்தாலுக்கூடியிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாருகயிருப்பாளேயாமாகில்
கூறுமற்சன்யாசங்கோள்.

என்பது நமக்கு இத்தனைநாளும் தெரியாமற் போயிற்றே என மனம் புழுங்கினவராய் வந்தவழியே போய்விட்டனர்.

அவ்வாறு பதிசொற்கடவாது இல்லறம் நடத்திய வாசுகியம் மனுகிய மனைவியிறந்து தகனசமுஸ்காரஞ் செய்யப்படுகையில் அவளுடைய பிரிவாற்ருது நோக்கி என்னுவிற்கினிய அறுசுவையுணவை யளித்து என்னைப்போஷிக்கின்றவளே! அனவரதமும் மாருத அன்புடன் இருப்பவளே! பதிசொல்கடவாதவளே! நித்திரை செய்யும்பொழுது என்பாதத்தை வருடிப்பின் நித்திரை செய்து நான் விழிப்பதற்குள் விழித்து எழுந்திருப்பவளே! அப்படிப்பட்ட நீ இப்பொழுது என்னைவிடப்பிரிந்து போவதுநலமல்லவே! இனி நான் எப்படிக் கண்ணுறங்குவேன் என்று பரிதபிததவராய்,

அடிசிற்கினியாளே யன்புடையாளே
படிசொற்றவராதபாவாய்—அடிவருடிப்
பின்றூங்கிமுன்னெழுந்தப் பேதையேபோதியோ
என்தூங்குமேன்கண்ணிரா.

என்று வியசனப்பட்டனர்.

ஆனதால், பெண்களுக்குக் கற்பென்னும் ஆபரணமே இன்றியமையாதது. கற்பே காவல்களெல்லா வற்றிலும் மேலானது. கற்பே பரகதிக்கு வழித்துணையாக வருவது. கற்பென்பது பதியாகிய தெய்வத்தினிடத்தில் வழிபட்டு மனதை வேறுவழிசெலுத்தாது ஒருவழியே நிலைநிறுத்தி நடத்துவது. இப்படியெல்லாம் இருக்க, இக்காலத்திலோ பகலில் விளக்கேற்றென்ருல் சூரியன் வெளிச்சமாக காயும்போதே திருதராஷ்டிரனுய் விட்டால் மீதி காலமெல்லாம் யென்னசெய்வாயென்றும், பழயசாதம் சுடுகையாயிருக்கின்றது விசிறிகொண்டுவாயென்ருல் வாயால்ஊதி ஆற்றிக்

கொள்ளக்கூடாதாயென்றும், அவசரமாகக் கூப்பிட்டால் ஒன்றும் முழுகிப்போகவில்லை சற்று அடக்கமாகயிரு வருகிறேனென்றும் எதிர்த்து வார்த்தை சொல்லும் அறிவிலா மட்டிப்பெண்பிள்ளையும் சம்சாரியா?

குஞ்சியழகுங்கொடுந்தானைக்கோட்டழகும்
மஞ்சளழகுமழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாமென்னுநடுவுநிலைமையால்
கல்வியழகேயழகு.

இம்மைபயக்குமாலீயக்குறைவின்றால்
தம்மைவிளைவிக்குமாற்றாமுளரர்—கேடின்றி
யெம்மையுலகத்தும்யாங்காணேம்கல்விபோன்
மம்மாறுக்குமருந்து.

என்று மூதோர் கூறியபடி, நமது சரீரம் ஆகாரத்தை முன்னிட்டு எப்படி வளருகின்றதோ அதுபோல புத்தியை வளரச் செய்வது கல்வியேயாம். ஒருவர் ஆடையாபரணமுதலிய அழகைப்பெறினும் அழகல்ல, தாம்கற்ற கல்வியே அழகாகும். கல்வியானது கள்வர் முதலிய கொடியவர்களால் கவர இயலாது. கல்வியை அன்னியர்களுக்கு எவ்வளவு செலவிடினும் குறைவுபடாது நாளுக்குநாள் பயிரைப்போல் ஓங்கி வளர்ந்துக்கொண்டே யிருக்கும்.

"நூலளவேயாகும் நுண்ணறிவு"

என்றார் பெரியோர்களும்.

அதற்கிணங்க நாம் எவ்வளவு கற்கின்றோமோ அவ்வளவு அறிவை அது எடைக்கிடைசரியாக நமக்குக் கொடுக்கும். தவிர, கல்வியானது இகத்தில் சுகானந்தத்தையும், பரத்தில் மோக்ஷத்தையும் கொடுக்கும். இதுபோன்ற பொருள் எவ்வுலகினுங் கிடையாதென ஆராய்ந்த பெரியோர்களும் கூறியுள்ளார்.

"கண்ணுடையரேன்பவர்கற்றோர் முகத்திரண்டுப்
புண்ணுடையர் கல்லாதவர்"

என்றபடி கற்றவர்களே கண்ணுடையவர்கள், கல்லாதவர்கள் முகத்திரண்டு புண்ணுடையவர்களென திருவள்ளுவநாயனாரும் கூறியது காண்க: மேலும்,

2

கல்லாதவர்கள் கடிவாளமில்லாத குதிரைபோலவும், கரை கடந்த வெள்ளம்போலவும், கட்டுக்கடங்காத காளைபோலவும், புருடனுக்கடங்காப் பெண்டீர் போலவும், துர்க்குணத்திற்காளாகி அறிவுகுன்றி, இம்மையில் துன்புற்று முடிவில் நரகமென்கிறப் பாதாளத்தில்வீழ்கிறார்கள். அந்தோ! பரிதாபம்! இந்தக்காரணத்தைப்பற்றியே ஆண்பிள்ளைகள் உத்தியோகஞ்செய்ய விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அவர்களுக்குப் படிப்பது வழக்கமாயிருக்கிறது.

இத்தகையக் கல்வியை ஆண் பாலர்களே பயிலவேண்டும். பெண்பாலர்கள் பயிலக்கூடாதென எந்தநூலுங் கூறவில்லை. சில புருஷர்கள்.

காசுக்கோருகுதிரையும்வேண்டும்
காற்றைப்போலபறக்கவும்வேண்டும் என்றும்

புல்லுண்ணாதபசுவும்வேண்டும்
பூரணமாகக்கறக்கவும்வேண்டும்

என்பது போலவும், ஸ்திரீகள் படிக்காதவர்களா யிருக்கவும் வேண்டும், பதிவிரதைகளாய் நடக்கவும் வேண்டும் என்றால், நமதெண்ணம் எவ்வாறு நிறைவேறும். தவிர,

கல்வியில்லாமையினாலேயே நமது இந்து தேசத்துப் பெண்கள் அஞ்ஞானயிருளில் மூழ்கி யிருக்கிறார்களென்பது சகலருக்குந் தெரிந்த விஷயமாயிருக்கிறது. பெண்கள் கல்வி கற்கவேண்டுமென்பது அவசியமென்று ஒருசாரார் ஒப்புக்கொண்டாலும், அனேகர் பெண்கள் படித்து உத்தியோகஞ் செய்யப்போகிறார்களா? இல்லை. அவர்கள் படித்தால் வித்தியாகர்வத்தால், புருஷர்களுக்கு அடங்காமலும், மாமி, மாமனார், மூத்தார், மைத்துனர்களுக்கு அடங்காமலும், குடும்பத்தை மதியார்களென்றும் ஆட்க்ஷேபிக்கிறார்கள். கல்வி கற்பது உத்தியோகஞ் செய்வதற்கல்லவே! நல்ல விவேகமும், நற்குணமும், நன்னடக்கையும், தெய்வபக்தியும் அடையும் பொருட்டேயாம், “பானத்துக்காக வெட்டுகிற குளம் ஸ்நானத்திற்காக உதவுவதுபோல, புத்தியின் அபிவிர்த்திக்காகப் படிக்கப்படுங்கல்வி உத்தியோக முதலியவற்றிற்கும் சாதனமாகிறதே, தவிர,

“குல்லாவுக்காகதலையே அல்லாமல்
தலைக்காககுல்லா அல்ல”

என்று சொல்லுவதற்குச் சமானமா யிருக்கின்றது.

கல்வியில்லாதப் பெண்கள் மூடபக்தி யுடையவர்களா யிருப்பதினால் அதிக அழகு வாய்ந்திருந்தும், தனது புருஷன் குணாகுணமறிந்து உண்டி முதலிய உபசரிப்பும், மதுரமான சம்பாஷணையுஞ் செய்யாதவர்களாயும், இருப்பதினாலன்றோ!

"வீட்டுப்பெண்சாதிவெறுப்பு
நாட்டுப்பெண்சாதிகருப்பு"

என்பதைப்போல, சில புருஷர்கள் தங்களுடைய சொந்த ஸ்திரீகளை விட்டுவிட்டு மூதேவிக்கு மூத்தவளா யிருக்கிற தாசிகளின் பாதமே கெதியென்று ஓடுகிறார்கள். பெண்கள் கல்வி கற்றிருந்தால் விவேக விருத்தியாக நாளுக்குநாள் நாகரீகத்தை யடையப் பெற்று அழகில்லாம லிருப்பினும் தமக்குரிய கந்தையையேனும் கசக்கிக்கட்டி, முகத்தை மினுக்கி, புருஷனுக்கு மந்திரிகளைப் போல சமயத்தில் புத்திமதிகளைச் சொல்லுவார்கள். காரியஸ்தர்களைப்போலக் கிருககிருத்தியங்களை யெல்லாம் நடப்பித்துக்கொள்வார்கள். கணக்கர்களைப்போல வீட்டைச்சேர்ந்த கணக்குகளை யெல்லாம் தாமே எழுதிக்கொள்வார்கள். தாயாரைப்போலப் புருஷனைச் சம்ரக்ஷிப்பார்கள். காவற்காரர்களைப்போல வீட்டுப்பண்டங்களையெல்லாம் காத்துக்கொள்வார்கள், நல்ல சுயம்பாகிகளைப் போலப் புருஷனுடைய நாவுக்கிதமான பட்சணங்களைச்செய்துக் கொடுத்து உபசரிப்பார்கள், வைத்தியர்களைப்போல புருஷனுடைய தேகசௌக்கியங்களுக் கடுத்த காரியங்களைத் தேடிச்செய்வார்கள், சங்கீத வித்வான்களைப்போல இன்பமான பதங்களைப் பாடியும், தேனொழுகும் வார்த்தைகளைப் பேசியும் புருஷனுடைய வருத்தங்களைத் தீர்ப்பார்கள், சிநேகிதர்களைப்போல புருஷனுடைய ஆபத்திற்குதவுவார்கள், புருஷன் பிசகிநடந்தால் அவனுக்குக் குருவைப்போல உபதேசஞ் செய்வார்கள், புருஷன் தாசிவீட்டிற் கேகும்வழியை பல நீதிவாக்கியங்களைக்கூறி நிவர்த்திப்பார்கள், அப்படிப்பட்டப் பெண்களுக்குப் படிப்பில்லாததினாலன்றோ! புருடர்கள் இவ்வளவு நன்மையையும் இழந்துபோக வேண்டியதா யிருக்கின்றது. அந்தோ! இது எவ்வளவு மதியீனம்.

சில குடும்பங்களில் அநேக பந்துக்களும், பிள்ளைகளும், வேலைக்காரர்களும் இருக்கிற படியால் அவர்கள் செய்யும் கலகங்களையும், மனஸ்தாபங்களையும், குடும்பத்தலைவி கல்வியில்லாதிருந்தால் அவர்கள் கலகங்களை எப்படித்தீர்க்க இயலும்? குருடனுக்கு குருடன் வழிகாட்டுவது போலவும், மூடனுக்கு மூடவன் சிலம்பங்கற்றுக்கொடுப்பது போலவும், மூடர் ஆஸ்தி முழுதும் நாஸ்தி என்பது போலவும் வீட்டில் வேலைசெய்யும் வேலைக்காரர்களின் களவுமுதலியவைகளை எவ்வாறு கண்டுப்பிடிக்க முடியும்.

பெண்கள் படித்திருந்தால் வீட்டுவேலைகள் முடிந்த பிறகு ஒழிவான காலங்களில் நல்ல புத்தகங்களை வாசித்துத் தங்கள் புத்தியை அபிவிர்த்தி யடையச்செய்வார்கள். அப்படி யில்லாமையினால் தம்மைப்போலொத்த மூடப்பெண்களோடுகூடி வீண்பேச்சுகளும், வம்பு வார்த்தைகளும், கோளும், பொய்யும், புரளியும் பேசித் துன்மார்க்கங்களைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். சிறு குழந்தைகளுக்குத் தகப்பனைவிட தாய்மார்களிடத்தில் அதிகபபழக்கமிருக்கிறபடியால்,

"பிள்ளையாரைப்பிடித்தசனியன் அரசமரத்தையும்பிடித்ததுபோல"

படிப்பில்லாத் தாய்மார்களுடைய அறியாமையும், துன்மார்க்கமும் பிள்ளைகளையும் சாரும்படியாகிறது. இன்னும் இவைபோன்ற பல உதாரணங்க ளிருக்கின்றபடியால் பெண்களுக்குக் கல்வி அவசியமெனத் தீர்மானிக்கவேண்டும்.

"பெண்ணிற்பெருந்தக்கயாவுளகற்பென்னுந்
திண்மையுண்டாகப்பெறின்" என்றார் நாயனாரும்.

கற்பென்னுங் கலங்கா நிலைமை யிருக்கப்பெற்ற மனையாளினும் ஒருவன் பெறுதற்குரிய உயர்வாகிய பொருள் வேறு என்ன இருக்கின்றன? உலகத்தில் பெண்களாய்ப் பிறந்தவர்கள் தமக்குரிய * நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நால்வகைக்குணங்களும் பொருந்தி மனதைப்பலவிடத்தும் செல்லவிடாது நிறுத்தி கற்புநிலை கெடாதிருக்கவேண்டும்.

தவிர, பெண்கள் விவாகமில்லாமல் கன்னிகைகளாயிருக்கும் பருவத்தில் தாய், தந்தையர்கள் ஆதீனத்திலும், விவாகமானபின் கணவர் ஆதீனத்திலும், கணவனுக்குப்பின் புத்திரர் ஆதீனத்திலும், புத்திரர் இல்லாவிட்டால் சகோதர் ஆதீனத்திலும் இருக்கவேண்டுமே யல்லாமல் ஒருபோதும் தன் சுவாதீனப்பட்டிருக்கலாகாது. இதல்லாமல்,

---

* நாணமேன்பது பிறரைக்காண நாணப்படுதல்.
மடமேன்பது எல்லாம் அறிந்தும் அறியாததுபோ லிருத்தல்.
அச்சமேன்பது என்றும் காணாததைக் கண்டவிடத்தஞ்சுதல்.
பயிர்ப்பேன்பது கணவரல்லாதார் கை மேற்படின் உடம்பு சிலிர் தல்.)அல்லது அரும்வாருத்தல.)

கொண்டான்குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகைசெய்வான் தவசி கொடிதொரீஇ
நல்லவைசெய்வானமைச்சன் இம்மூவர்க்கும்
பெய்யெனப்பெய்யு மழை.

என, தான்குறிப்பறிந்து செய்யவேண்டும். பெண்ணேயே் பெண் இச்சிக்கத்தக்கதாக ஸ்ரீ மகாலட்சுமியைப்போல் அதிரூப சௌந்தரவதியாக இறுக்கவேண்டு மென்று சொல்வது சகலருக்கும் ஒருங்கே யமையாதலால், தான் அழகிருந்த ஊரில் குடியிருந்தரியாதவளாயிருந்தாலும், தினந்தினம் திரேகத்தைச்சுத்தப்படுத்தி, தனக்குரிய ஆடைகளைச் சுத்தப்படுத்தி யணிந்து, தனக்கிருக்கிருக்கும் ஆபரணங்களை யணிந்து, மஞ்சளைப்பூசி, குங்குமமணிந்து பார்ப்பவர்கண்களுக்கு இவள் ஸ்ரீ மகாலட்சுமியைப்போலிருக்கின்றாள். ஒருக்கால் லட்சுமியே இம்மாதிரி அவதாரஞ்செய்தாளோ! என்று சொல்லும்படியாய் இருக்கவேண்டும். நீங்க, பொறுமையில் பூமிதேவியைப்போ லிருக்கவேண்டும் என்பதினால் இந்த பூமியானது நம்மால் நடந்தேறிவரும் அளவிடக்கூடாத நன்மைகளையும், தீமைகளையும், கோபமும், சந்தோஷமுமில்லாமல் எப்படி பொருத்துக்கொள்ளு கின்றுளோ அப்படி நாயகனுனவன் காரணமில்லாமல் அடித்தாலும், வைதாலும், கோபியாமல் அவர் தன்னுடன் சரஸமாடுவதாகநினைத்து பொறுத்துக்கொள்ளவேண்டும். இன்னும் அரசனுக்கு அமைச்சன் காலமறிந்து ஆலோசனைகளை எவ்வாறு போதிப்பாரோ அவ்வாறு தன்நாயகனுக்குத்தான் சமயாசமயங்களில் நற்புத்திகளைப் புகட்டவேண்டியது. நீங்கவும் சயனகாலங்களில் தனக்கு எத்தகைய வருத்தங்களிருப்பினும் ஊடலில்லாது அவர் எண்ணத்திற்குப் பின்னம் வராமல் சந்தோஷமாகவே அவரைத் திருப்தி செய்யவேண்டும். அதுவுமன்றி தாய்க்குப்பின் தாரம் என்னும் மூதோர்வார்த்தையின்படி தன்நாயகனுக்கு. அறுசுவையுணவில் எதன்பேரில் அதிக நாட்டமோ அதைனைச்செய்து திருப்தியோடு உபசரணையுடன் உண்ணச்செய்யவேண்டும். இத்தகையப் பெண்களையே பெண் என்று சொல்லவேண்டும்.

ஏதிலான்றனேழில்கண்வேப்பவர்
பேதுசெய்துழல்பேயுருவெய்துவார்
காதலன்பசிக்கக்களித்துண்பவர்
பாதகஞ்செய்யும்பன்றியிற்றேன்றுவாள். என்றும்,

குலமகட்குத்தெய்வம் கொழுநன். என்றதால்

தனக்கு இகபரசாதன் தெய்வமாகிய நாயகனன்றி பரபுருஷர் அழகைக்கண்டு மனது சந்தோஷிப்பவள் பிசாசாகப் பிறப்பாள்,

நாயகன் பசியோடு இருக்கத் தன்வயிற்றை முன்னதாக நிரப்பிக் கொள்பவள் மலத்தைப்புசிக்கும் பன்றியாகவும் பிறப்பாள் என இச்செய்யுளால் நன்கு விளங்குகிறது.

சிறைகாக்குங்காப்பவன் செய்யுமகளிர்
நிறைகாக்குங்காப்பே தலை.

என்றார் நாயனாரும். ஆதலால்,

எண்சாணுடம்பிற்குச் சிரசே பிரதானமும், பஞ்சேந்திரியங் களுக்குள்ளே கண்ணே பிரதானமுமாக இருப்பதைப் போலப் பெண்களுக்குச் சகல நற்குணங்களிலும், நற்பு நிலைமையே முக்கிய ஆதாரமாக இருக்கின்றது. கற்பு நிலைமைத் தவறாதவள் அழகில்லாமலிருந்தாலும் அவளைக் கல்யாணவீட்டுப் பூமாலையைப் போல் யாவரும் புகழ்ந்துக் கொண்டாடுவார்கள். இரதியைப்பழிக்கத்தக்க ரூபலாவண்ய மிருந்தாலும் கற்பில்லாதவளைச் சுடுகாட்டு பூமாலையைப்போல யாவரும் இகழ்ந்து ஏசுவார்கள்.

அரைக்காசுக்கழிந்தகற்பு ஆயிரம்பொன்கொடுத்தாலும்வருமா?

கெட்டுப்போனகற்பு எட்டுநாளழுதாலும்வருமா?

வாராது. ஐயோ! அவள் வியபிசாரஞ்செய்து எடுத்துக்கொண்ட அபகீர்த்தியானது மற்ற குற்றங்களெல்லாவற்றிலும் மேலானதாக, அவள் இறந்தாலும், அவளுடைய அபகீர்த்தியானது இறவாமல் சூரிய சந்திரருள்ளளவும் சிரஞ்சீவிப் பட்டம் பெற்றுக் கொள்ளுகின்றது.

உலகத்தில் அக்கினிசாக்ஷியாக மாங்கல்யந் தரித்தப் புருஷனுக்குத் துரோகஞ்செய்து விபசாரம் செய்கின்றவள் தான் கெட்டுப்போவதல்லாமல், தன் புருஷனுக்கும், உற்றார் உறவினர் முதலிய சுற்றத்தார்களுக்கும் துரோகியாவதுடன், இவள் விரும்பின அந்த அந்நிய புருஷனுடைய பத்தினிக்கும் பெரிய துரோகியாகிறாள். இதுவன்றி, இவளுடைய துன்மார்க்கத்தால் இவளுடைய புருஷனுக்கும், அந்நியபுருஷனுடைய பத்தினிக்கும், உண்டாகிற மனசஞ்சலமும், போறாமையும், கஷ்டமும், துக்கமும், கோபமும் அபரிமிதமல்லவா? மேலும் கற்புநிலை கெட்டவள்,

கோடாலிக்காம்பு குலத்திற்கீனம்.

என்பதுபோல, தன்னுடைய உற்றார், பெற்றார் முதலியவர்களுக்கும். தன்னுடைய புருஷன் வழியைச்சார்ந்த சுற்றத்தாருக்கும் அவமானத்தையும், இழிவையும், நிந்தையையும் உண்டுபண்ணுகிறாள். அந்தோ! இந்த அநியாயமான உலகமானது அவள்செய்த

ஒரு குற்றத்திற்காக அவளையும், அவள் பந்துக்களையும், புருஷனையும், பிள்ளைகளையுங்கூட அவமானஞ் செய்கிறதே! இதுவும் அவளுடைய தலைவிதியா? அல்லது காலத்தினுடைய கோலமா? நீங்க, இவ்வளவோடாவது விட்டுவிட்டதென்றுப் பார்த்தாலோ அதுவும் விட்டபாடில்லை. எப்படி யென்றால், வியபிசாரஞ்செய்த கன்னிகையின் பெயர் பெரிய பட்டதாரியா யிருந்தாலும், அவளை துன்பமும், நாகமும் விட்டுவிடாமல் தங்களுக்கே சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட வியபிசாரியால் ஒவ்வொருசமயம் இவளுடைய புருஷனுக்கும், சோரபுருஷனுக்கும் கொலைமுதலிய துஷ்டகாரியங்களும் உண்டாகிறது. இதன்றி, அந்த அன்னிய புருடனுடைய ஆசையால் இவளே எமனில்லாது தன் புருஷனை தானேகொல்ல முதலில் கங்கணங்கட்டிக் கொள்ளுகிறாள். இரண்டாவது அன்னிய புருஷனால் தனக்குண்டாகும் கர்பத்தைப்பல மருந்துகளைத்தின்று அழித்து அதனால் வரும் சிசுஹத்தியைத் தேடிக்கொள்ளுகிறாள். மூன்றாவது, காமத்திற்குத் துணைக்கருவியான லாகிரிவஸ்துக்களையும் புசிக்க எத்தனப்படுகிறாள். நாலாவது, அப்பேர்ப்பட்ட லாகிரி வஸ்துக்களை விலைக்குவாங்கவும், அப்போது பரபுருஷர்கள் தன்னைப்பார்த்து மயங்கவும் பலவித ஆபரணங்களை விலைமாதைப்போல அலங்கரித்துச் செல்லுவாள். ஐந்தாவது தன்கையில் பொருளில்லாவிட்டால் பிறரை மோசஞ் செய்வதற்கும், ஒருவர் பொருளைத் திருடுவதற்கும் ஆரம்பிப்பாள் ஆறாவது ஒரு புருஷனைப்போல பல புருடரையும் சேர்ந்துப் பொருள் சம்பாதிக்கத் துணிவாள். ஏழாவது, தன் திரேகத்தைப் பல வழிகளில் செலுத்தி அதனால் வரும் நோய்களால் திரேகத்தைக் கெடுத்துக்கொண்டு, வயற்றுக்கும் வழியற்று, சுற்றத்தார் முதலியவர்களிடம் போவதற்குப் பாத்தியமும், மரியாதையுமில்லாது திகைத்துக் கடைசியாக பிச்சை யெடுக்க ஆரம்பிப்பாள், அப்போதுதான்,

பட்டால்தெரியும் பறையனுக்கு
சுட்டால்தெரியும் நண்டுக்கு

என்றவாக்கியத்தை நினைத்து, ஐயோ தெய்வமே! நான் இளமையில் கற்பைக் கருதாது வியபிசாரத்தில் பிரவேசித்ததினாலல்லவோ இந்தக்கதி நேர்ந்தது என்று துக்கப்படுவாள்.

இவ்விதமாகக் கற்பழிந்தசண்டாளி இறந்தால் எமதூதர்கள் அவளைச் சிலாக்கோலால் திரேகமாதியந்தமும் குத்துவார்கள், இரும்புலக்கையால் எலும்புமுறிய அடிப்பார்கள், கோடாலியால் மண்டையைக் கொந்துவார்கள், அக்கினிஸ்தம்பத்தை நிறுத்தி

அடி! அன்னிய புருடனைச் சேர்ந்தக்கள்ளியே! அவனை ஆசை யோடு தழுவியதுபோல் இந்த அக்கினிஸ்தம்பத்தைத் தழுவடீ! என்று யீட்டியால் குத்தித்தழுவச் சொல்லுவார்கள். இன்னும், அவள் சரீரம் நசுங்கும்படி செக்கிலிட்டு ஆட்டுவார்கள், யீயத் தைக் காய்ச்சியும் ஊத்துவார்கள், இரும்பினால் செய்தக்கழுமரத் தை அக்கினியில் பழுக்கக் காய்ச்சி அதில் அவளை யேற்றுவார் கள், அன்னிய புருடனைக்கண்டு ஆசைப்பட்டக் கண்களைப்பிடுங்கி கழுகிற்கு உணவாகக் கொடுப்பார்கள். சோரநாயகனோடு சுகமாக விளையாடிய சரீரத்தை முள்ளுபீப்பாயில் வைத்து உருட்டுவார் கள். இதன்றி, அட்டை, அரணை, பூரான், செய்யான், தேள், நட் வக்காளி, பாம்பு முதலிய ஜெந்துக்கள் வாழும்படியான நரகக்குழி யில்தள்ளி துன்பப்படுத்துவார்கள் மேலும் இவளுக்கு இரௌர வமுதலிய இருபத்தெட்டு நரகமே சொந்தமென்றால் வேறே என் சொல்வது. ஐயோ! அல்பமாகிய வியபிசாரஞ்செய்ததினாலல்ல வோ பூலோகத்திலும் துன்பம், மேலோகத்திலும் நரகவாதையாக நேரிடுகின்றது.

முற்காலத்தில் கற்பின் வல்லமையினாலல்லவோ சந்திரமதி காட்டுத்தீயைக் குளிரச்செய்தாள். தமயந்தி தன்னை இச்சித்து வந்தவேடனை எரித்துச் சாம்பலாக்கினாள். அநுசூயை தன்கற் பை சோதிக்கவந்த திரிமூர்த்திகளையும் குழந்தைகளாக்கி ஸ்தன்ய பானம் பண்ணுவித்தாள். சாவித்திரி தன்நாயகனான சத்யவந்தன் உயிரை எமன் கொண்டுபோகிற தருணத்தில் அவனுடனேவாதா டி மீட்டுக்கொண்டாள். நளாயினி மாண்டவ்யரின் சாபத்தால் தனக்கு வைதவ்யம் வராது பொழுது விடியாதிருக்கப் பிரதிசா பமிட்டுத் தேவர்கள்வேண்ட விடிய அனுக்கிரகித்தாள். இப்படி யெல்லாம் இருப்பதினாலல்லவோ கற்புடையவர்களின் மகிமையை தேவர், முனிவர்களாலும் அளவிடற் கரிதென்று சொல்லுவ தோடு,

வேதமோதிடும் வேதியர்கோர்மழை
நீதிமன்னர் நெறியினுக்கோர்மழை
மாதர்கற்புடை மங்கையர்க்கோர்மழை
மாதமூன்று மழையெனப்பெய்யுமே,

அரிசிவிற்றிடு மந்தணர்க்கோர்மழை
வரிசைதப்பிய மன்னருக்கோர்மழை
புருஷனைக்கொன்ற பூவையர்க்கோர்மழை
வருஷமூன்று மழையெனப்பெய்யுமே.

என்றபடி, புவியில் மாதமும்மாரியும், வருஷமும்மாரியும் பெய்து வருகின்றது.

பெண்விரும்புங்காலை பிதாவிரும்பும்வித்தை
எண்ணில்தனம்விரும்பு மீன்றதாய்—நண்ணி
கூரியநற்சுற்றங் குலம்விரும்புங்காந்தனது
பேரழகுதான்விரும்பும் பெண்.

என்றபடி, ஒரு பெண்ணை விவாகஞ்செய்து கொடுக்கும்போதே பிதா வித்தியா சாமார்த்தியமுள்ளப் பண்டிதனுக்குக் கொடுக்க வேண்டு மென்றும், தாயானவள் மகள் ஐஸ்வரியவானுக்கு வாழ்க்கைப்பட வேண்டுமென்றும், சுற்றத்தார்களோ நல்ல குலஸ்தன் வந்து வாய்க்கவேண்டு மென்றும், அந்தப் பெண்ணோ அழகிற் சிறந்த வரனை நாம் வரிக்கவேண்டு மென்றும் நினைக்கிறதுண்டு. ஆயினும் அது அப்படியே வாய்க்குமா? தெய்வச்செயலின்படி அல்லவோ சம்பவிக்கும்.

எழுதாதவிதி அழுதால்வருமா? வராது.

சிறித்தையோ சீரைக்குலைத்தையோ.

என்ற பழமொழிப்படி, கொல்லைக்காட்டுநரி பல்லைக்காட்டியது போலும், என் பெயர்தான் பல்லழகியென்று சிரித்துக்காட்டுவது போலும், தன்புருஷனல்லாத அன்னிய புருஷர் எதிர்நிற்காமலும் அவர் முகத்தைப் பாராமலும், அவர்களுக்கெதிரே சிரிக்காமலும், பரிகாசவார்த்தைகளாடாமலும்,

அடக்கம் ஆயிரம் பொன்

என்பதாய் இருக்கவேணும்.

இல்லாளகத்திருக்க வில்லாததொன்றில்லை
யில்லாளுமில்லாளேயாமாயின்—இல்லாள்
வலிகிடந்த்மாற்ற முரைக்குமேயவ்வளவில்
புலிகிடந்ததூறுய் விடும்.

என்பதினால், கற்புடைய மனைவியில்லாதவீடு புலிகிடந்த தூறாய் விடுமென்றும், கற்புடைய மனையாளிருக்கும் பட்சத்தில் அவன் அடையப்பெறாத பாக்கியம் வேறொன்றும் இல்லையென்பதினால் பெண்களுக்கு கற்பே சிறப்பாக சொல்லப்படுகிறது. மேலும்,

கற்பில்லாதமனைவி தாமரையில்லாத தடாகம்போலும், சந்திரனில்லாத ஆகாயம்போலும், அரசனில்லாத நகரம்போலும், மந்திரியில்லாத அரசாட்சிபோலும், படைத்தலைவனில்லாதசேனை போலும், தெய்வஸ்துதியில்லாத நெஞ்சம் போலவும், கிருபை

3

யில்லாத கண்போலவும், பயனில்லாத சொல்போலவும், மணமில்லாத மலர்போலவும் உலகத்தில் சிறப்புடன் பிரகாசிக்கமாட்டாள் ஆனபடியால், கண்டவர்கள், கேட்டவர்கட்கெல்லாம் இந்த உத்தமி கல்வியிற் கலைமாதோ! கற்பில் அருந்ததியோ! கருணையிற் பார்வதியோ! பரிசுத்தத்திற் பவானியோ என்று அதிசயிக்கும்படி விவேகமும், கற்பும், இரக்கமும், சுசியும் உள்ளவளாக இருக்க வேண்டும்.

வீட்டு வேலைகள் ஒழிந்த நேரங்களில் கற்பைப்போதிக்கும்படியான அருந்ததி, சாவித்திரி, அநுசூயை, ரேணுகா முதலிய பதிவிரதைகளின் சரித்திரங்களும், பக்திரசக் கீர்த்தனங்களையும் வாசித்தும், வாசியாத பெண்களுக்கு தாங்கள் உபதேசித்தும் வருவார்களாகில் நாளுக்குநாள்,

சிறுதுளி பெருவெள்ளம்

என்பதுபோல் கற்பு அபிவிருத்தி யடைத்து உலகோர்களும் இவளைமகா பதிவிரதையென்று கொண்டாடுவார்கள். அப்படியின்றி,

அல்லியரசாணி மாலை, புலந்திரன்களவு மாலை, பவளக்கொடி மாலை, காமியப்பகவிராயர் பதம், சுப்பராம அய்யர்பதம் முதலிய சிற்றின்ப நூல்களைப்படித்துச் சிரித்து எக்காளத்துடன் தாளங்கள் போடுகிற பெண்களும் சம்சாரியா?

அந்தோ! நான் ஒருசோறும் ஒரு கறியுமாகத்தின்று நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்திருந்தேனே! என்னை இப்படியும் இந்தப் பாழுங்கிணற்றில் தள்ளுவார்களா! என்று ஒப்பாரிவைக்காமல்,

நிதியுங்கணவனும் நேர்படினுந்தந்தன்
விதியின்படியே நடக்கும்.

என்று கருதுவது மன்றி,

மலையிலேவிளைந்தாலும்
உரலிலேவந்துதான் மசியவேண்டும்

என்பதை எண்ணி அடங்கி நடக்கவேண்டும்.

நுண்ணறிவுடையோர் நூலோடுபழகினும்
பெண்ணறிவென்பது பெரும்பேதமைத்தே

என்று முன்னோர் கூறியபடி, தன் பேதமைக்காரணமாக அன்னியராகிய செல்வர்களின் ஆடம்பரங்களைக் கண்டு,

நெய்க்குடத்தைத் தலையில்வைத்துக்கொண்டு
எண்ணமிட்டவனைப்போல

நாம் இந்தச்சீமானைச் சிநேகிதம் செய்துக்கொண்டால் சதாகால மும் யாதொரு வருத்தமுமின்றி, வேளாவேளைத்தவறாது பலவித பரமான்ன பக்ஷணங்களுடனே நெய்யார, கையார, வாயார நல்ல இராஜ போஜனமுண்டு சுகித்து, வாசனைத்திரவியங்கள் சேர்ந்த சந்தனத்தால் நலங்கிட்டுக்கொண்டு, பனிநீரில் ஸ்நானஞ்செய்து உடுத்தும் வஸ்திரத்தின் இருமுனைகளிலுமுள்ள கரைகளுக்கும், முந்தானைக்கும் விலையுயர்ந்த நவரத்தினங்களை வரிசையாகக் கோர்த்து, இடையிடையே நெருங்க மல்லிகை, முல்லை, குமுதம்போல விசித்திரமான பூக்களமைத்துப் பிடித்தால் பிடிக்குள்ளடங்கும் படியாகிய அதிக நாணயமுள்ள இழையொன்று ஆயிரம்பொன் பெற்ற இந்திரவர்னப் பட்டென்னும் பொற்சரிகை சேலையுடுத்தி முத்துக்களைச்சேர்த்து நெய்த கச்சுபூண்டு, மேகம்போல் கறுத்து தழைத்து, நெய்த்து, நெரிந்து, நீண்டு, சுருண்டக் கூந்தலுக்கு வாசனைகளைச் சேர்த்த மயிர்ச்சாந்துபூசி, தங்கச்சீப்பு சிக்கங்கோல் கொண்டு சீவிச் சிக்கறுத்து வாரி வகிர்ந்து திவ்யபரிமள புஷ்பங் களைவைத்து முடித்து, நெற்றியில் சவ்வாது பொட்டிட்டு, கண்க ளுக்கு மைதீட்டி, கழுத்திற்குக் கஸ்தூரிபூசி, மார்புக்குச் சந்தனத் தால் தொயில்வரைந்து, தோளுக்கு விற்கோலந்தீட்டி, காலுக்கு செம்பஞ்சூட்டி, கன்னத்திற்குக் கறுப்பெழுதி, உலகமெல்லாம் விலைமதிக்கத்தக்க, நவரத்தின கசிதமாகிய தலைப்பணி, செவிப் பணி, நுதற்பணிகளுடன் ஆரகேயூரங்களும், ஜாஜ்வல்லியமாய்ப் பிரகாசிக்க, கைகளிற் பொற்சரிகை பொற்கடகங்கள் ஜொலிக்க, கால்களில் இரத்தினச்சதங்கை, இரத்தினச் சிலம்புகள் கலீர் கலீ ரென்று ஒலிக்க, நாசியில் வஜ்ஜிரநத்து வஜ்ஜிர மூக்குத்திகள் கண் கூசும்படித் தகதகவென்று ஜொலிக்கக் கேசாதிபாத பரியந்தம் பொன்காய்த்தாற்போல் பிரகாசிக்க, மெய்யிற்பூசிய சந்தனகுங்கும கற்பூர கதம்பாதி பரிமளவர்க்கங்கள் காததூரம் கம்மென்று மண க்க, முன்கையிற் பற்றிய பூங்கொத்தில் கிளிகள் கொஞ்ச, அண்ட கோளத்தையும் அளாவும்படிப் பளிங்கினால் கட்டப்பட்ட மலை போலும் பெரிய ஏழடுக்குப்பரிகையில் மாணிக்கமயமான சித்திரக் கட்டிலின்மீது தாதிமார்கள் காம்பரிந்துப் பரப்பிய மெல்லியபுஷ் பத்தின்மேல் வடிவிற்சிறந்த சிலபெண்கள் மேனகைதாங்கவும், சிலபெண்கள் சாமரைபோடவும், சிலபெண்கள் ஆலவட்ட மசை க்கவும், சிலபெண்கள் தாம்பூலமடித்து நீட்டவும், சிலபெண்கள் பவளக்காளாஞ்சி யேந்தவும், சிலபெண்கள் ஆலாத்தி எடுக்கவும், சிலபெண்கள் கைலாகு கொடுக்கவும், சிலபெண்கள் நிலப்பாவா டைவிரிக்கவும், சிலபெண்கள் பிடித்துவரும் ஆணிமுத்துப்பந்த

ரீன்கீழ் பூங்கொடிபோல் இடையசைய அன்னம்போல் அடிபெயர்த்து, மதாதிபோற் கைவீசி கலாபத்தைவிரித்து மயில் நடக்கின்றதுபோல உடல்குலுங்கச் சொகுசாகப்போய் சுகமாகப்படுத்து, வைப்பாட்டியானாலும் சொந்த பெண்டாட்டியைப்போல் சகலசம்பிரமத்துடனே சகலபோகமும் அநுபவித்துக்கொண்டு, நல்ல மோடடியாய் வாழலாமே! அதை விட்டு விட்டு இந்த அஷ்டதரித்திரம்பிடித்தக் காமாட்டிப் படுவானைக் கட்டிக்கொண்டு, அல்லும் பகலும் வயற்று சோற்றுக்கே குட்டிக்கரணம் போடுகின்றோமே என்று அக்கினிசாக்ஷியாகத் தன்னைக் கைப்பிடித்த வறியனாகிய கணவனைக் கைவிட்டுவிட்டு அவன் மனம்வெறுக்கக் கொள்ளிகொண்டு சுடுவதுபோல கடுஞ்சொற்சொல்லி சீறித்திரிகின்றவளும் சம்சாரியா?

அவளைத்தான்,

அரசனைநம்பிப் புருஷனைக் கைவிட்டவளுக்கு ஒப்பாகச்சொல்லவேண்டும் எப்படி யென்றால்,

சம்புவேயென்னபுத்தி ஜலந்தனில்மீனைநம்பி
வம்புறும்வடத்தைப்போட்டு வானத்தைப்பார்ப்பதேனோ?

ஏ நரியே! உன் புத்தி எப்படிப்பட்டது! ஜலந்தனில் வசிக்கும்படியான பாய்ச்சலையுடைய மீனை ஆகாரமென்று நம்பி, ஏற்கெனவே நீ ஆயத்தமாக வைத்திருந்த ஆகாரத்தைச் சுழலுகின்ற கண்களையுடைய பருந்துக்கு உணவாகக் கொடுத்துவிட்டு ஆகாயத்தைப் பார்க்கின்றாயே! உன் அல்பபுத்தி மிகவும் விசனிக்கத்தக்கது. என வியப்பாகச் சொல்லிய இராஜபத்தினியைப் பார்த்தசம்புகமானது குலுங்கநகைத்து, ஆ! ஹா!!

அம்புவிவிழிமின்னாளே அரசனையகலவிட்டு
வம்பனைக்கைபிடித்த வாறுபோலாச்சுதம்மா.

அம்பைப்போலுங் கண்களும், தோன்றிமறையும்படியானமின்னற்பிரகாசம்போலுந் திரேககாந்தியு முடைய பெண்ணே! உன் பதியாகிய அரசனைத் துரோகஞ் செய்துவிட்டு, நாடோடியிலொருவனாகிய வம்பனைக் கைப்பிடிநாயகனாக நினைத்துவந்து ஆற்றங்கரையில்நின்று எண்ணமிடும் உன்கெதியைப்போல என்கதையும் ஆச்சுதம்மா என்று விடைபகர்ந்ததாம். அன்றியும்,

வாய்த்தவிடும்போய்
அடுப்புநெருப்பும் அவிந்ததாம்

என்றதைப்போல, வியபிசாரப்பட்டமும், பழியும் விளைவதுடன் மறுமையிலோ ரௌரவாதி நரகத்தில் வீழ்ந்து அளவில்லாத

காலம் கொடிய வேதனையும் அநுபவிக்கவேண்டிவரும். ஆதலால் பெண்களாகப்பட்டவர்கள் எப்போதும் "பதிவிரதம்" என்னும் ஆபரணத்தை மாத்திரம் கைநழுவ விடலாகாது. இன்னும்,

துறந்தார்க்குந்துவ்வாதவர்க்குமிறந்தார்க்கு
மிலவாழ்வானேன்பான்துணை.

என்கிற வாக்கியத்தின்படி, இல்லறத்திலிருப்போன் நடக்கவேண்டியது. அதற்கொற்றுமையாகக் கிழத்தியும் இருக்கவேண்டியது. அதன்றி, புருஷனானவன் ஒருவருடைய பசியை நீக்கவேண்டுமென்று சொன்னால், பெண்சாதியானவள் தன்னுடைய பஞ்சேந்திரியங்களையும் ஒருங்கே சுவாதீனப் படுத்திக்கொண்டு வந்தவர் வியக்குமாறு அன்போடு பணிவிடைகளைச் செய்து உவக்கவேண்டும். அப்படியின்றி,

ஐயருக்கமுதுபடையென்றுவந்தாய்நீயும்
ஆண்பிள்ளையென்றெண்ணியோ
அரிசியெங்கேசட்டிபானையெங்கேயென்ன
அவள்சொன்னவகைகளெல்லாம்
பையவேகொண்டுவந்தாலும்சமைக்கப்
படாதுதலைநோகுதேனவு
பாரில்கிடப்பள்சினமாயொன்றுபேசினல்
பாருனக்கேற்றபுத்தி
செய்யவல்லேனென்பள்சற்றடித்தால்நஞ்சு
தின்கிறேன்கூகூவெனத்
தெருவீடுதோறுமுறையிடுபெண்டிருண்டேனிற்
றீயநமன்வேறுமுண்டோ

85689

என்ற மூதோர் வாக்கியத்தின்படி ஆ! ஹா!!

தன்னைப்பெற்றஆத்தாள் கிண்ணிப்பிச்சையெடுக்கிறாள்
தம்பிகும்பகோணத்திலேகோதானம்பண்ணுகிறானும்

என்றதைப்போல நீ சொல்லவந்தது எனக்குச் சிரிப்பை விளைவிக்குது அமுது படைக்கின்றதற்கு அரிசி வேண்டாமா? பதார்த்தம் வேண்டாமா? இதுகளெல்லாம் இல்லாமல்படி வெறுங்கையை முழம்போடுவது எப்படி? தவிர,

அரிசிஆழாக்கானாலும் அடுப்பங்கட்டி
மூன்றுவேண்டுமல்லவோ

இதுகளெல்லாம் இல்லாமல்படி என்னமாய் சமையல்செய்கிறது? வீட்டிருப்புத்தெரியாத ஆண்பிள்ளையைக் கட்டிக்கொண்டு எத்தனைநாளைக்குத் தான் சமாளிப்பேன் என்று சொன்னதைக்கேட்ட புருஷனானவன் சகல சாமன்களேயுங் கொண்டுவந்துக் கொடுத்து இப்போதாகிலும் சீக்கிரஞ்சமைத்து வந்த பரதேசிக்கு அமுது படையென்ருன். அதற்கவள், நீ போ

தலைநோயுங்காய்ச்சலும்
தனக்குவந்தால்தானேதெரியும்

என்று படுத்துக்கொண்டாள்.

அதைப்பார்த்தப் புருடனானவன் கோபித்து அடீ! செக்குலக் கையைப்போலிருக்கின்ற உனக்கு வந்த கேடுகாலமென்ன வென, அவள்,

எருதுநோய் காக்கைக்குத்தெரியுமா?

என்று பாயைவிரித்து நெடுகமுக்காடிட்டுப் படுத்துக்கொண்டாள்.

அக்கோலத்தைப்பார்த்த புருடனானவன் இவள் என்ன சண்டியாயிருக்கிருளென்று கோபத்தினாலே ஓரடி அடித்தான். உடனே அவள் இராக்ஷசியைப்போலெழுந்து ஆரவாரத்துடன் பெருங்கூச்சலிட்டு, ஆ! ஹ!! சண்டாளா!!! என்னை அடித்துக்கொல்லவா எற்பட்டாய்?

உரலிலேதலையை நுழைத்துக்கொண்டு
உலக்கைக்குப் பயப்பட்டால்விடுவா?

அம்மா கொல்லு நான் இனி உயிரோடிருக்கிறதில்லை. ஊமத்தங்காயைத்தின்று உயிரை வாங்கிக்கொள்ளுகிறேன் என்றுபெருங்கூச்சலிடடுக் கூட்டஞ்சேர்க்கிறவளும் சம்சாரியா?

இதற்காகவே ஔவையாரும்,

தூற்றும்பெண்டிர் கூற்றெனத்தகும், என்ருர்.

பொய்சொன்னவாய்க்குப் போசனங்கிடையாது

என்பதினால், புருஷன் விஷயத்தில் உண்மையாய்க் கறந்தபால் கறந்தபடி பொய்பேசாது, அவன் கருத்தின்படி ஒழுகி கொழுநனையே மேன்மையாகப் பாவித்து அவன் சொலலைத்தட்டாதுபக்திவிநயத்துடன் நடக்கவேண்டியது. நீங்க, கொடுமையைச் செய்யும்படியான பொய்யை எப்போது சொல்லவேண்டு மென்ருல், நுண்ணிய இடையையுடைய மங்கையர் பிணக்கிலும், மறையோருயிர் பிழைக்குந் ததியிலும், பசுவைத்தானங் கொடுக்குஞ் சமயத்தும்,

அழகிய மணத்திலும் பொய்பேசுவது மெய்யைக்காட்டிலுஞ் சிற ந்ததாம். அதற்காகவே,

பொய்யுரைபுகலிற்றீமையாமென்னப்புகன்றனர்
　　புலமைநன்குணர்ந்தோர்
ஐயநுண்மருங்கிற்செய்யவாய்மகளிற்புலவியி
　　ரந்தணராவி
யுய்யுமென்புழியிலாவினையளிக்குமிடத்தினி
　　லோடரிநெடுங்கட்
டையலார்மணத்திற்பொய்ம்மையுமெய்ம்மை
　　தன்னினும்விழுமிதாமன்றே.

இன்னும்,

பொய்மையும்வாய்மையிடத்தபுரைதீர்ந்த
நன்மைபயக்குமெனின்.

இன்னும்,

பொற்றொடிமணஞ்செய்போதும் புலவியையொழிக்கும்போதும்
நற்குலமறியும்போதும் நல்லவர்தம்மைக்கொல்ல
அற்பர்கள்முயலும்போது மருஞ்சமர்விளையும்போதும்
முற்புகலைந்திடத்து மொழியலாம்நாறுபொய்யே.

என்றும் கூறியிருக்கின்றார்கள்.

ஆனதுபற்றி, பஞ்சமாபாதகத்தி லொன்றாகிய பொய்யை நீக்கிவிடவேண்டியதே இல்லறத்தியற்கை.

அறுபத்தினாலடி கம்பத்தின்மேலாடினாலும்
கீழேயிறங்கிதான் தியாகங்கேழ்க்கவேணும்.

என்றதைப்போல தான் எவ்வளவுதான் பெரிய அந்தஸ்துடைய வள் வீட்டுப்பெண்ணாயிருந்தாலும், வரியனாகிய புருஷனுக்கு வாழ் க்கைப் பட்டால் அவனுக்கு அடங்கி, ஒடுங்கி நடக்கவேண்டும், அதை விட்டு விட்டு, புருஷன் ஏதாகிலும் ஒன்றைச் சொல்ல வாயெடுக்காததன்முன்னமே அவன் எதிர்நின்று பல கொடுஞ்சொற் களை வாரிக்கொட்டுகின்ற மூதேவியும் சம்சாரியா?

அன்பற்ற மாமியாருக்கு
கும்பிட்டாலும் குற்றம்.

என்கிற பழமொழியைப் பகைத்து ஆ! ஹா! இவள் எங்களுக்கு மருமகளா! எங்கள் குலதெய்வமே இவ்வுருக்கொண்டு வந்தது

என்று அவர்கள் மெச்சும்படி நடந்து நல்லபேரெடுக்காமல் அவர்கள் ஒன்று சொல்ல வாயெடுக்காமுன்னமே, அடி பாதகி! நீ என்னைப்போல பெண்ணைப் பெறவில்லையா! அவர்களெல்லாம் குற்றஞ் செய்யவில்லையா! நான் உங்களிடத்தில் ஆடல்படுகிறேனே! எனக்கு சாவும்வந்து தொலையவில்லையே! பாழும்பிரமனுக்குக் கண்ணில்லையா என்று பேச்சுக்கு முன் ஒப்பாரியை சரமாரியாய் கோர்க்கும் பெண்பிள்ளையும் சம்சாரியா? ஆனால் உலகத்தில்

மகன்செத்தாலும் சாகட்டும் மருமகள்
தாலிஅறுத்தால் போதும்.

என்று நினைக்கிற நல்லகுணமுள்ள மாமிமார்களும் சிலருண்டு இருந்தாலும்

பொல்லாதவேளை எல்லாருக்கும் உண்டென்று.

நினைத்து அடக்கமாக நடந்து பேரெடுக்க வேண்டும். அதை விட்டு விட்டு.

கோட்டகைவிளக்கும் தடப்பத்திற்கு
ப்பட்டாமணியம் வந்ததுபோல.

துள்ளிக் குதித்து அடங்காப்பிடாரியாய் விளையாடிவரும் பெண்பிள்ளையும் சம்சாரியா? தவிர

பிரமனதுகேர்வமும் மாறன்புகழ்ச்சியும்
பீடுபெறு வாலியசுமும்
பேரிலங்கைக்கரச ஞற்றலுமிராட்சசப்
பெண்தாடகைச் சமர்த்தும்
திரிபுரர்களெண்ணமுந் தக்கனதுவேள்வியும்
தீக்குபுரி துரியனியலும்
சினங்கொளுங்கைடவன் மதத்தொடுசூரபன்மன்
செருக்குமிது வீரர்வலியும்
இரணியனபிடிமானமும் பகாசூரனியம்யோனு
வுயிர் பழிப்பும்
இவர்பராக்கிரமமு மிகுந்தபுரவலர்மதமு
மிரவாது நிலைகின்றதோ

என்றபடி இறுமாப்பு கொள்ளாது.

ஊசியும் சரடும்போல
என்னளும் ஒத்து நடக்க வேண்டும்.

ஒய்யாரக்கொண்டையாம் தாழம்பூவாம்
உள்ளேயிருக்குமாம் யீரும்பேனும்.

என்பதைப்போல் மேலுக்கு மாத்திரம் ஒன்றுந் தெரியாத உருத்தி ராட்சப் பூனைபோல் வேஷம் போட்டுக்கொண்டு சமயம் வந்ததும்

அல்லவாபூனை
அமுக்கவாமீனை

என்று, கொடிய வார்த்தைகளால் தூஷித்து ஒவ்வொரு குடும்பத் தையும் நடுங்கச் செய்கின்ற இராக்ஷசப் பெண்களும் சம்சாரியா?

உழுகிறகாலத்தில் ஊருக்குப்போய்
அறுக்கிறகாலத்தில் அறிவாளேடுத்துவந்தானும்

என்பதைப்போல தான் எவ்வர்னமான காலத்தில் புருடனுக்கும், மாமன், மாமி, நாத்தி முதலானவர்களுக்கும் அடங்கி ஒடுங்கி நட வாது இளங்காளையைப்போல் திரிந்து

குந்தினையாதுரங்கே சந்தடியடங்க

என்றதைப்போல பாதி வயதைப் பலபேர்களுக்கும் ஒப்படைத்து விட்டு,

ஐந்துபேர்க்கு அப்பாத்தையும்
பத்துபேர்க்கு பதிவிரதையுமாய்

வீட்டைத்தேடி வருகிறவளும் சம்சாரியா?

தன்னைசிறிக்கின்றது தெரியாதாம் பரங்கிமலைக்குரங்குக்கு
பக்குபகவென்றுசிரிக்குமாம் பல்லாவரத்தைப்பார்த்து

என்றதைப்போல தன் நடவடிக்கை கெட்டதா யிருக்கும் போது தான் இன்னொருவரைப் பார்த்துக் கேலிசெய்யும் பெண்களும் சம் சாரியா?

ஐயோ! செல்வத்தில் பிறந்து வளர்ந்த என்னை இச்சிர்குலைந்த மாளிகைக்குக் கொண்டுவந்து கவிழ்க்க எத்தனை நாள் காத்திருந் தார்களோ! அப்படிக் கவிழ்த்தவர்களுக்கு கடவுளும் சகாய மிருக் குமா? என் பெண் பாவம் உங்களைச் சுற்றாமல் விடுமா? நான் உங்க ளுக்குச் சட்டி சுரண்டவா வந்தேன? அல்லது உங்கள் குடும்பத் திற்கு வேலை செய்து சாப்பிடத்தானு வந்தேன்! இந்த சாப்பாடு எங்கள் வீட்டில் கிடைக்காதா! அங்கே

"வாழைப்பழஞ்சோறு வல்லார் தின்றுவிட்டுப்போக"

இங்கே நான்

"கீரை சோற்றுக்கும் கேதியற்று கிடைக்கிறேனே"

ஐயோ! தெய்வமே! உனக்குக் கண்களில்லையா? இப்படியும் என் தலையில் எழுதி மறைத்து வைப்பாயா! இவர்கள் ஆதியில் என்னைப் பேசும் போது இப்பெண்ணை என் பெண்ணைப்போலவே பெண்ணுக்குப் பெண்ணாகப் பார்ப்பேன் கண்ணுக்குக் கண்ணாகக் கார்ப்பேன். மேலும் நானே பெண்ணுக்கு ஏக்கற்றப் பெரும்பாவி,என்று பசப்பினீர்களே! ஆதிநாளையில நீ இப்பேர்ப்பட்ட பசப்பி யென்று தெரிந்திருந்தால் நான் உங்களுக்கு வாழ்க்கைப்பட மாட்டேனே! முறிச்சிறிக்கியைப்போல வீடடுவேலைகளை யெல்லாம் நான்தான் செய்யவேண்டு மென்று வரும்போதே அடிமைப்பதிரம் எழுதிக் கொடுத்தேனா! என்னைப்போல் நீயும் வந்தவள், உன்னைப்போல் நானும் வந்தவள் தானே! நீமாத்திரம் சின்னஞ் சிறுக்கியைப்போல குலுக்கிக் கொண்டும் கைவீசி உலாத்திக்கொண்டும், வேளா வேளைக்கு மினுக்கிக் கொண்டும் இருக்கலாமென் றிருக்கின்றாயா? நீமாத்திரம் தாலியை கழுத்தில் கட்டிக்கொண்டு வந்தாய், நான்மாத்திரம் காலில் கட்டிக்கொண்டு வந்தேனா?அறியாதவர்களுக் கென்றால் வருகிறவர்களை வாவென்றுசொல்லவும் போகிறவர்களைப் போவென்று சொல்லவும் சரியாக இருக்கும் நீயோ கிழப்பிணந்தானே? உனக்கு வீட்டு வேலைகளைவிட வேறு என்னவேலை இருக்கின்றது? ஏதோ இரண்டொரு வேலைகளைச் செய்துவிட்டு கிடைக்கும் பரிக்கையை கதுக்கிவிட்டு சும்மா யிராமல் எப்போது பார்த்தாலும் மொண மொண வென்று மொருவிக்கொண்டு அப்புரமும்இப்புரமும் தாண்டுகால் போடுகிறாயே இனிமேல் நீ என்னை இப்படிக்கெல்லாம் கேழ்க்கவேண்டாம் உனக்கோ பொறாமை அதிகம் உனக்கு என்னை வைத்துப் படைக்கத் திறமை யில்லாவிடடால் என்னை தாயோடு பெண்ணைக் கொண்டுபோய் சேர்த்து விட்டு உன் பிள்ளையுடன் சுகமாக நீயேவாழுகிறதுதானே நான்வேண்டாமென்றுசொன்னேனா?என்று எதிர்த்து வாதிடடுக்கொண்டிருக்கிறவளையும சம்சாரியென்று சொல்லலாமா?

"வல்லடி வழக்கைச் சோல்லடி மாமி"

என்பதாய் யார் அகப்படுகிறார்களோ அவர்களை செந்நாயைப் போன்று வளவள வென்றுப் பிடித்து, நீங்கள் ஆணோடு பெண்ணோடு பிறக்கவில்லையா?அவாகள் புருஷனும் பெண்சாதியும் எப்படி போனால்தா னென்ன நமக்குரிய அடுப்பூதி வேலையை நாம் பார்பபோம் என்று இல்லாதபடி,

"கருவாட்டுக்காரி சந்து விட்டாள்
நானும் வந்து விட்டேன்"

என்று நியாயஞ் சொல்ல வந்துவிட்டாயா? பலே பேஷ் இருந்தால் உன்னைப்போலல்லவா இருக்க வேண்டும், நானும் வந்த ஏழுமாத காலமாகப் பார்க்கிறேன், புருடனிடம் பேசவா, சிரிக்கவா, விளையாடவா, உனக்கு மனந் தாளுகிறதில்லை, ஏதாவது வியவகாரமிருந்தால், நேரில் நின்று பேசப்படாதா, கேழ்க்கப்படாதா, இந்த குட்டிச்சுவரை எனக்குக் கட்டிவைக்க நீ எத்தனை நாள் காத்திருந்தாயோ! அடீ பாதகி! உலகத்தில் நல்லவர்களை யெல்லாம் கொண்டு போகும் எமனுக்கு உன்னைப் பார்க்கக்கூட மனஞ் சகிக்கவில்லை போலிருக்கின்றதே! வருகிற மகம்மாரியும் உன்னைத்தொட அஞ்சுகின்றாளே! என் பெண் பாவத்தினாலாவது நீ தொலையக்கூடாதா! அட தெய்வமே! எனக்கும் இப்பேர்ப்பட்ட கதி வாய்க்குமா! அம்மம்ம இது வரையில் நான் வாழ்ந்து வாரிக்கொண்டது போதும் இனி இந்தத் தாலியை நீயே கட்டிக்கொண்டு சுகமாக வாழ்ந்துக் கொண்டிரு, எனக்கு ஒரு ஓடாகுது நாலு வீடாகுது என்று தாலிக் கயற்றைக் கழட்டி மாமியார் முகத்தின்பேரில் விட்டெறிந்துவிட்டு ஓடி காலியாய் ஊர் சுற்றுகின்றவளும் சம்சாரியாவாளா?

வாசிக்கத் தெரிந்த பெண்கள் தங்கள் வீட்டுவேலைகள் ஒழிந்த வேளைகளில் அல்லியரசாணி மாலை பவழக்கொடி மாலை முதலிய கங்கைப் பாட்டுகளை படியாமல் கற்பிலக்கண புஸ்தகங்களையும் அருந்ததி, அநுசூயை முதலிய கற்பரசிகள் சரித்திரங்களை வாசித்தும், வாசியாத பெண்களுக்கு உபதேசித்தும் வருவார்களாமாகில் நாளுக்குநாள் கற்பு அபிவிருத்தி யடையுமென்பது நன்கு விளங்குகிறது.

அரைகாத்தான் பெண்டிழந்தான்

என்ப, பெண்கள் தமது கற்பினால் காக்குங் காவலே காவலாகும். அன்றி, அவர்களைக் கணவர் சிறையினாற் காக்குங் காவல் என்ன பயனைத்தரும், தராது, ஒருவனுடைய மனைவியினிடத்தில் நற்குண நற்செய்கை கற்பு உண்டாயிருந்தால் அம்மனைவினிடத்து ஒன்று மில்லா திருந்தாலும் எல்லாம் உள்ளனவேயாம். அவள் மறுமையில் சுவர்கத்தில் தேவர்களால் பூசிக்கத்தக்க பெருஞ் சிறப்பும் பெறுவாள்.

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை.

என்பதால், பெண்களுக்கு கற்பென்னப் படுவது கணவனது சொல்லைக்கடவாம லிருப்பதே யாம்.

"தெய்வந்தொழா அள்கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

என்று நாயனர் திருவாக்கின்படி சித்திரை மாத கத்தரி வெய்ய லில் நின்று,

மழை பெய் என்றால்,

சொல்லி வாய் மூடுமுன்னே கார்த்திகை மாத மழையைப்போல் பெய்யும். இவ்வளவும் கற்பின் மகுத்துவமல்லவா?

அவ்வாறில்லாமல் கணவனேடெதிர்த்து நிற்பவள் யமன், அவனுக்குக் காலமறிந்து உண்டி சமைக்காதவள், தீராநோய்,சமை த்த உணவை அவனுக்குப்பறிமாறி அவன் உண்ணச் சகியாதவள், இல்வாழ் பேய், அன்றி இம்மூவரும் கொண்டவன் கழுத்தை அறு க்கவந்த கூர் அரிவாளாகும். இவர்களைக் காட்டிலும்,

பேசுமனையாளின் பேய் நன்று

என்றதே உத்தமம்.

மேலும், கணவனைக் கோபித்து உக்கிரமாய் பார்த்தவள் வேங்கைப் புலியாகவும், அவனை வரம்பு கடந்து வைதவள் கொள்ளிவாய் பிசாசாகவும்,அவனைக்கண்டு எழுந்திராமல் கிடந்தவள் மலைப்பாம் பாகவும் பிறப்பாள்.

பதிவிரதா ஸ்திரீகள் தன்நாயகன் தனக்குரிய ஆடையாபரண முதலியவற்றை தன்நாயகனுக்கே வாழ்க்கைப்பட்ட சக்களத்திக்கு கொடுத்து விட்டாலும் பொறுமை படாமலும் முகசுஞ்சுக்கில்லா மலும் மனம் பொறுக் கொள்ளுவார்கள்.

தன் புருஷன் தன்னை நீங்கி வெளியூர் முதலிய இடங்களுக் குச் சென்றிருக்கும் காலத்தில், விலைமாதர்களைப்போல் மினுக்கிக் கொண்டிராமல் அவர் வருகையை எதிர்பார்த்திருந்து அவர் வந்த தும் சரீர சுத்தம் செயது ஆடையாபரண அலஙகிர்தம் செய்துக் கொண்டு புருஷனை மகிழச்செய்வார்கள்.

தன்நாயகன் ஆயுள் விருத்தி யாகும்பொருட்டு தினந்தினமும் மஞ்சளைப்பூசி குங்குமத்தை யணிவார்கள். நாயகன் சூடிய மாஙகல் யத்தை நாயகனகப் பாவித்து அதற்கும் மஞ்சள் குங்கும மிட்டு புஷ்பம் சூட்டி தூபதீபங் காட்டுவார்கள்.

பெண்கள் தன் புருஷன் உத்திரவின்றியும், தனித்தும் கோயில், திருவிழா முதலியவைகளுக்குப் போகக்கூடாது. அவர்களுக்கு கணவனை யன்றி இம்மை மறுமைப் பயனை யடைய வேறு தெய்வமும் ஆலயப்பணிவிடையுங் கிடையாது.

அடிக்கடி அண்டைவீடு அயல் வீட்டிற்குப் போகலாகாது. எவ்விடத்திற்காவது யாதொரு நிமித்தத்தால் அவசியம் போக வேண்டியிருந்தால் சிறிய பெண் குழந்தை யாயினும் வழித்துணையாய்க் கூட்டிக்கொண்டு போகவேண்டுமே யல்லது தனிவழி நடந்து தண்டுமாரியாக திரியலாகாது.

பெண்களிருப்பிடம் பெரிய சண்டை என்பதால்,

ஒரு பெண் பேசினல் பூமி அதிரும், இரண்டு பெண் பேசினல் நட்சததிரம் உதிரும், மூன்று பெண் பேசினல் உலகம் யாதாகுமோ, என்பதனுல், ஆருடனும் இடி இடித்தது போல உரக்கப் பேசாமல், குயில் கூவுதல போல இனிய குரலாகக் கிளி கொஞ்சுவது போல மிருது பாஷியாய் வசனிக்க வேண்டும்.

ஐந்துவயது ஆண்பிள்ளையைக் கண்டால்
ஐம்பதுவயது பெண்பிள்ளையும் எழுந்திருக்கவேண்டும்

என்றபடி ஆணுப் பிறந்தவர்கள் பிதாவானுலும், சகோதரர்களானுலும், பெற்ற பிள்ளையானுலும், மற்றும் எவரானுலும் அவர் இருக்குமிடத்தில் அச்சமின்றி யிருக்கலாகாது.

பெண்கள் நடக்கும் போது பூமியதிராமலும், தன் கால் பெருவிரலை அல்லது நிலத்தைப் பார்ததவண்ணமாய், அன்னம்போலும், பெண் யானை போலவும், மிருது நடையாக நடக்க வேண்டும்.

வந்ததேசிறுக்கி பந்தடித்தாள்
வரவரசிறுககி கழுதைமேய்க்கிருள்.

என கல்யாணஞ் செய்யப்பட்டு மாமி வீட்டுக்கு வந்தவுடனே சர்வ ஜாக்கிரதையுடனே சூரத்தவமாயிருந்து பின்பு வர வர சோம்பலை யடைந்து நெஞ்சில் கபடுவைத்து,

எவனே சேத்தான்
அவளேன் அழுதாள்.

என்பதாக சம்சார காரியங்களை கொஞ்சமும் கவனியாமல் இக்கூடாது.

வல்லடிவழக்கைச் சொல்லடிமாமி.

என்பதாய் மாமி மாமனாரை எதிர்க்காமலும் அவர்களைத் தாய் தந்தையர்களைப் போலக் கருதி அவாள் காலில் பட்டது தன் கண்ணில் பட்டதாகக் கருதி, குடும்ப பாரங்களை தானே ஏந்திக் கொண்டு, அவர்களுக்குவேண்டிய உபசாரனைகளைச்செய்து, அவர்களும் மனமகிழ்ந்து கண்மணியாகிய என் செல்வ மருமகளைப்போல தேடக் கிடைக்குமா? இவள் எங்களுக்கு மருமகளா? அல்ல, எங்கள் குலதெய்வமே இப்படி உருக்கொண்டுவந்தது என்று அவர்கள் மகிழும்படி நடந்துகொள்ள வேண்டும்.

நாத்திமார்களையும் வரிசை வண்மை தவறாமல், அவர்கள் இந்தப் பாக்கியவதிப்போல் எங்களுக்கு எங்கும் காணக்கிடையார்கள் என்று சொல்லும்படி நன்றாய் உபசரிக்க வேண்டும்.

கணவனுடைய சோதரர்களை பேதமா யெண்ணால் பரிபாலிப்பதனால் அவர்களில் மூத்தவர்கள் இவள்தான் எங்கள் புத்திரி என்றும் இளையவர்கள் இவள்தான் எங்களைப் பெற்ற தாய் என்றும் கொண்டாடும்படி செய்யவேண்டும்.

அவர்களுடைய மனைவி மார்கள் தன்னுடைய உசித குணத்தைக்கண்டு இவள் பெண்கள் நாயகம், பெண்கள் பாத்திரம், பெண்கள் மாணிக்கம், பெண்ணமுதமென்று ஸ்துதிசெய்யும்படி அவர்களை சகோதரிகளைப்போல பாவித்து கலகமில்லமால் நேசிக்க வேண்டும்.

ஏருழுகிறவன் என்னசெய்வான்
பானைப்பிடித்தவள் பாக்கியம்.

என்று, புருஷனுக்கு பொருள் வரவின்றி வருமைப்படுங் காலத்தில் அவன் சம்பாதிக்க வில்லை யென்று மனஞ்சலிக்கும்படி அவனை செல்லெரிப்பதுபோல எந்நேரமும் வருத்தப்படுத்தலாகாது.

கணவனுடைய தோட்டத்தில் வரும்பொருளளவிற்கு தக்கபடி மிதமாய் செலவு செய்யாமல் கண்டபடிக்கெல்லாம் கைகொண்ட மட்டும் சில வழித்து அவன் தலையில் ஓட்டைக் கவிழ்த்து கடன் காரனாக்காமல், திறமையுடனே சிறுகச் செலவு செய்து, உலகத்தார் இராக்காலத்திற்கு உதவியாகப் பகற்காலத்திலும், மழை காலத்திற் குதவியாக இளமையிலும், மறுமைக்குதவியாக இம்மையிலும், வேண்டியவைகளை தேடிவைத்து பாதுகாப்பதுபோல இல்

வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் தருணமறிந்து சேகரித்துப் பின்னுக்காகுமென்று சிக்கெனக் காப்பாற்ற வேண்டும்

உரல், உலக்கை, அம்மி, முறம், வாசற்படி இவைகளின்மேல் கால்பட நடக்குதலும் உட்காருதலும் கற்புடைய ஸ்திரீகள் செய்யார்கள். அவ்வாறு செய்யில் அவர்களை விட்டு லட்சுமி விலகிப் போவாள்.

கற்புயைடவள் தன் கணவனிறந்தால், அரிய விரதங்களை அனுஷ்டித்து, சந்தன புஷ்ப தாம்பூல அலங்கார வஸ்திர பூஷணாதி சுகங்களை வெறுத்து, ஒருவேளை மாத்திரம் அற்பமாய் அன்னமருந்தி தன் ஆயுள் முடிவில் தன் கணவர் இருக்கும் உலகத்தை யடைய விரும்புவார்கள்.

கற்புடையப் பெண்களை பெற்றவர்களுடைய மரபும், அம்மாதரசியை மணம் புரிந்தவருடைய மரபும் தெய்வலோகத்தை யடைவார்களென, இதிகாசங்களுரைக்கின்றன. கடவுள் இருபையால் கற்புடைய தாய்மார்கள் நீடூழி வாழி மங்களம்

ஸ்திரீகள்

கற்பிலக்கணம்.

அருமையாகிய தவங்களைச்செய்த அகஸ்தியமுனிவரே! அலங்கரிக்கின்ற வலிதங்கிய வீரக்கழலை யணிந்த தேவர்கள், குளிர்ச்சி பொருந்திய பெருமைதங்கிய ஆகாயத்தினின்றிரங்கி ஆசையுடன் தேவரீரிடத்தில் வந்த காரணத்தை யான் எடுத்துச்சொல்கிறேன் கேட்பீராக என்று பிரகஸ்திமுனிவர் இனிமையோடு அகஸ்தியமுனிவரை நோக்கிச் சொல்லத்தொடங்கினார்.

நெடியகடல்சூழ்ந்த இவ்வுலகத்திலும், நிலைபெற்ற தபோவனத்திலும், உயர்ந்த மலைகளிலும், நினைத்தற்கரிய தவங்களைச் செய்கின்ற முனிவர்களில் தேவரீருக்குச் சமானமானவர்கள் அன்னப்பட்சியை வாகனமாகவுடைய பிரமதேவனை யல்லாமல் இந்தப் பெரிய உலகத்தில் வேறே யாரிருக்கின்றனர். ஒருவருமில்லை. கங்கையாற்றைச் சடையிற்றரித்த நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானது மிகுந்த பெருமைதங்கிய கிருபையைப் பெற்ற அரிய தவசிரேஷ்டராகிய அகஸ்தியமுனிவரே! இடமகன்ற வானுலகத்தில் வாசஞ்செய்கின்ற தேவர்கள் தங்களுக்கோர் குறைவுநேரிடுமாயின் தேவரீரிடத்தில் வருவரன்றி வேறெங்கே செல்லுவார்கள். இன்னும் அருமையாகிய தவங்களைச் செய்து முடித்த அகஸ்தியமுனிவரே! குற்றமில்லாத கற்போடு விளங்குகின்ற மாணிக்கமாலையையொத்த மயில்போலுஞ் சாயலையுடைய (உலோபாமுத்திரை) என்னும் அம்மையார் தேவரீரது பத்தினியாராகும் என்றால், தேவரீரது மனதில் எத்தனித்தால் செய்து முடிப்பதற்கு அருமையான காரியம் எது இருக்கின்றது? எதுவுமில்லை.

பிரகாசிக்கின்ற அருந்ததியையும், மேனையையும், சுநீதியையும், உள்ளத்தில் அன்புவிளங்கும் சாவித்திரியையும், அநுசூயையையும் தேவரீரது குற்றமற்ற சமானமில்லாத கற்புடைய மனையாராகிய உலோபாமுத்திரையோடு மனமொத்து சமானமாவார்களென்று சொல்லுதற்குக் கூடுமோ? கூடாது.

நாயகன் அன்னம்புசித்த பிறகு தான்புசிக்கும் கோட்பாடும் அவன் நித்திரை செய்தபிறகு தான் நித்திரைசெய்தலும், அவன் நித்திரைநீங்கி எழுந்திருப்பதன் முன்னே தனது * (மெல்லிய) நித்திரையினின்று எழுந்திருப்பதுமே யல்லவா குற்றமில்லாதக் கற்புடைய பெண்களின் செய்கைகளாகும். இதேமாதிரி நடந்து வந்த வாசுகியம்மன் சரிதம் முன் விளக்கப்பட்டது.

கற்பினையுடைய மாதர்கள் பிரகாசிக்கின்ற நவமணிகளிழைத்த பொன்னாலாகிய ஆபரணங்களைப் பூண்டு, தன் இனிய உயிருக்குச் சுதந்தரமுடைய கணவன் கண்டு களிக்கும்படி அவர் முன் செல்லுவர். அப்படிப்பட்ட கணவர் தன்னைவிட்டு நீங்கியகாலத்தில் அணிந்திருக்கும் ஆபரணங்கள் எல்லாவற்றையும் நீக்கிவிட்டுச் சரீரத்தை அழுக்குண்ணும்படி அழகுசெய்யா திருக்கவேண்டும். இதற்காகவே,

> நாளில்லாநாள்பூத்த நன்மலரும்போலுமே
> யாளில்லாமங்கைக் கழகு

என்றார் மூதாட்டியாரும். தவிர,

தமது இனிமையாகிய புருஷர் யாதொரு காரணத்தினாலாவது கோபங்கொண்டால், வெறுப்படைந்த மனத்துடன் அவர் நேர்நின்று பதில்வார்த்தை சொல்லக்கூடாது. அப்படிப்பட்ட கணவர் † (எரிந்தாலும்) ஆசையோடு மனமிரங்க வேண்டும்.

பதிவிரதையாகிய பெண்கள் தான் அடைந்துள்ள வீட்டைவிட்டு வெளியே செல்லமாட்டார்கள். அப்படி வீட்டை விட்டு அடிக்கடி வெளியே செல்லும் பெண்களது முகத்தைப் பார்த்தாலும் ஒடுங்குவர். குற்றமற்ற கணவர்வந்து எவற்றையாகிலும் செய்தீர்களாயெனக் கேட்டலும் செய்துவிட்டோம் என்று ஆசை தவழுகின்ற முகத்துடன் சொல்லுவார்கள். இதற்காகவே,

---

* மெல்லிய நித்திரை என்பதினால் பெண்கள் நித்திரைசெய்கையில் கணவன் முதலாயினோர் சிறுகுரலிட்டழைக்கின், விடைதர வேண்டுமென்றித் தம்மை மறந்து நித்திரை செய்யப்படாதென்பது பெறப்பட்டது.

---

† எரிதல் என்பது - அடித்தல், உதைத்தல், குத்தல், வெட்டல் ஆகிய நால்வகையி லொன்று.

கொள்பொருள்வெஃகிக்குடியலைக்கும்வேந்தனும்
உள்பொருள்சொல்லாச்சலமொழிமாந்தரும்
இல்லிருந்தெல்லைகடப்பாளுமிம்மூவர்
வல்லேமழையருக்குங்கோள்

என்றார் திரிகடுகத்திலும்,

குற்றமற்ற கற்பினையுடைய பெண்கள் தேர், திருவிழா முதலிய வேடிக்கைகளைப் பார்க்கின்றதற்கும், மேன்மையைத் தரும்படியான விரதங்களை அனுஷ்டிக்கிற தற்கும், குற்றத்தைப்போக்கும்படியாகிய பரிசுத்தமான புண்ணிய நதிகளில் மூழ்கின்றதற்கும், தேவர்களை வணங்கித் துதிக்கின்றதற்கும் அரிய தமது கணவனுடைய கட்டளையின்றிச் செய்யமாட்டார்கள். மேலும்,

பரிசுத்த மனதினையுடைய புண்ணியவதிகளாகிய கற்பினையுடையப்பெண்கள் அலங்கரிக்கின்ற தமது ஆபரணங்களைக் கணவன் * மாற்றவளுக்குக் கொடுப்பினும் கோபங்கொள்ள மாட்டார்கள். முதுமைப்பருவ முடையார் அடைந்தில்லாத வேற்றிடத்திற்கும் செல்லமாட்டார்கள். அயல் மனையில் எவ்வித காரணங் கொண்டும் நுழையமாட்டார்கள்.

கெடுதலில்லாத கற்பினையுடைய மாதர்கள் தமக்கு அமைந்த நாயகரது திருத்தமாகிய வாழ்நாள் குறைவுபடும் என்று கருதி, அவரது பெயரை எக்காரணங்கொண்டும் சொலலமாட்டார்கள். நாயகர் உட்கார்ந்தபோதன்றித் தாம் அவருக்கு முன்னே உட்கார்ந்து வார்த்தையாட மாட்டார்கள். அவர் உண்டு விட்டுவிட்ட மிகுதியாகிய எச்சிலை உயர்வாகிய தேவாமிர்தத்திற்கும் மேன்மையாகப்பாவித்து உண்ணுவார்கள். நீதிதவறாத தமது நாயகரது கிருபையால், துறவிகளுக்கும். சுற்றத்தவர்களுக்கும், ஏவலாளர்களுக்கும், மேம்பட்டப் பழைமையாகிய குலதெய்வத்திற்கும், பசுக்களுக்கும், விருந்தினருக்கும், தமது வமிசத்தில் இறந்துள்ள பிதுர்களுக்கும்பாகித்து இனிமையாக உண்ணுவார்கள். இதற்காகவே

தென்புலத்தார்தெய்வம்விருந்தொக்கலுனென்றாங்
கைம்புலத்தாறோம்பறலை

என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்.

---

* மாற்றவள் - வேற்றுப்பெண். அல்லது, சககளத்தி. சகம்-சமானம், களத்தி - கழுத்து கொடுத்தவள். அதாவது தன்போன்று மணஞ்செய்துக் கொண்டவள். இது சக்களத்தி என இக்காலத்தும் வழங்குகின்றது.

கற்பினையுடையப் பெண்கள், தம்மை மணஞ்செய்துக்கொண்டபொருந்திய நாயகரது மனதில் விரும்பிய செயல்களைச்செய்யும்படி, அவர் கட்டளை யிடுவதன்முன்னே குறிப்பாலறிந்து செய்து முடிப்பர். இதல்லாது, கெடுதலில்லாத தமது நாயகரைப் பலரறியப் பழிச்சொல்லால் தூற்றுகின்ற குயில்போலுங் குரலையுடையப் பெண்களது அற்பமாகிய முகத்தைப்பார்க்கின்றதற்கு அஞ்சுவார்கள். பதிவிரதைகள் இல்வாழ்க்கைக்கு வேண்டியவற்றைப் பாதுகார்த்துச் சேர்த்து வைப்பார்கள். தீயகருமங்களைச்செய்து ஒன்றையும் வீணில் அழிக்கமாட்டார்கள். தம்மை மணந்த நாயகரது வாழ்நாள்கள் அதிகரிக்கும்படி வளமிகுந்து அழகு செய்கின்ற மஞ்சளைப்பூசுவார்கள். மேலும், குற்றமற்ற பதிவிரதையாகியப் பெண்களுக்கு நாயகனது உத்திரவு கடவாது வசிக்கின்ற கோட்பாடே தவறுதலில்லாத மேம்பட்ட நல்லதருமமும், சிறந்ததவஞ் செய்தலும், கடவுளை வணங்கி மலரால் அருச்சித்துத் துதித்தலும் என்று தெள்ளிய மனதையுடைய பெரியோர்கள் சொல்லுவர் இதனை,

கற்பெனப்படுவது சொற்றிரம்பாமை

என்னும் ஒளவையார் திருவாக்கானு முணர்க.

மேலும், கற்பினையுடைய பெண்கள் தமக்கு நேர்ந்த கணவர் அழகின் மேம்பாடு கொஞ்சமும் இல்லாதவராயினும், தீராவியாதிகளை மிகுந்து அடையப்பெற்றவராயினும், வயது முதிர்ந்துகிழத்தன்மை யுடையவராயினும், அவரைக் குற்றஞ்சொல்ல மாட்டார்கள். அவர் மனங் களிப்பெய்துமாறு தகுதியாகத்தழுவுவர்.

கொண்டகணவன்குரூபியேயானாலும்
பண்டுதான்செய்தபலனெனவே—கண்டுகொண்டு
குற்றமெனவெண்ணிமனங்கோணாதவன்பணியைப்
பற்றிமிகச்செய்வார்பணிந்து.

என்றார் பெரியோர்களும். மேலும்,

கற்புடைய மடந்தையர்கள், நாயகர் நித்திரைசெய்தால் தாமும் அவரைப்போல் நித்திரை செய்தலும், அவர் வருத்தமடைந்தால் தாமும் அவரைப்போல் வருத்த மடைதலும், அவர் சந்தோஷித்திருந்தால் தாமும் அவரைப்போல் சந்தோஷப்படுதலுமே யல்லவா விலைபெற்ற பெரிய தவமென்று எண்ணுவர்.

காதன்மனையாளுங்காதலனுமாறின்றித்
தீதிலொருகருமஞ்செய்பவே

என்னும் நீதிவாக்கியத்தின்படி,

நாயகன் எச்சமையத் தெவ்வாறிருப்பினும், மனைவி அவனுக்கியைய அச்சமயத் தவ்வாறே இருக்கவேண்டும் என்பது பெரியோர்களின் கருத்து. நீங்க,

ஒளிதங்கிய கண்களையுடைய பதிவிரதைகளாகிய நற்குடியிற் பிறந்த மாதர்கள், தமது கணவரது அழகிய பாதங்களைக் கழுவிய குளிர்ச்சியாகியநீரைக் கங்காசல மென்றும், அக்கணவரே விளங்குகின்ற உத்தமத் தேவர்கள் மூவரில் உண்மையாக எம்மை ஆட்கொள்ளும் சிவபெருமான் என்றும் எண்ணுவார்கள்.

உத்தமத்தேவர்தம்முளுத்தமனீசனும்

என்ற பரஞ்சோதி முனிவரின் திருவாக்கின்படி,

பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்னும் பெருந்தேவர் மூவரைக்காட்டிலும், எம்மை அடிமையாகக் கொண்ட உண்மையாகிய கடவுள் எனப் பொருள் கொள்ளுதலுங்கூடும். தவிர,

குலமகட்குத்தெய்வங்கொழுநன்

என்ற குமரகுருபரசுவாமிகள் திருவாக்காலும்,

தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள்

என்னும் நாயனார் திருவாக்காலும்,

கணவனையே தெய்வமென்று வணங்கும் கற்பின் மடந்தையர் நினைக்கின் முடியாத கருமமும் உலகிலுளதோ!

மேம்பட்ட கற்பினையுடைய மாதர்கள் மாசருதுவை யடைந்தால், விலகி வாசஞ்செய்கின்ற மூன்று தினத்திலும், தமது முகமாகிய மலரை நாயகருக்குக் காட்டமாட்டார்கள். அவர்காதில் விழும்படியாக ஒரு வார்த்தையுஞ் சொல்லமாட்டார்கள். நாலாநாள் நீராடிய பிறகு மிகுதியாகிய அன்புடைய தமது கணவர் முகத்தைப் பார்ப்பார்கள். இதனை,

தீண்டாநாள்முந்நாளுநோக்கார் நீராடியபின்
ஈராறுநாளுமிகவற்கவென்பதே
பேரறிவாளர்துணிவு

என்ற ஆசாரக்கோவையாலுணர்க.

கற்புடைய மாதர்கள் பரிசுத்தமாகிய சிறந்த புண்ணிய நதிகளின் அழகிய நீரில் மூழ்கும்போது, தமக்கு இனிமையாகிய நாயகர் வேற்றூருக்குப் போயிருப்பாராயின், அப்படிச்சென்றிருக்கும் நாயகரை அன்போடு மனத்திலெண்ணி ஸ்நானஞ்செய்து குளூர்ச்சிதங்கிய ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற சூரியனைப் பார்ப்பார்கள். இகழ்வில்லாத தமது நாயகரது தாய் தந்தைகள் இருந்தால் அவர்கள் முன்பாகச் சிரித்துப் பேசமாட்டார்கள். கணவர் தம்மைக் கூப்பிடுவாராயின் மேலாகிய நல்ல அமுதமாயினும் உண்ணுவதைவிட்டு மனதிற்கொண்ட பேரவாவோடும் சீக்கிரமாக அவரை சமீபித்து வருவார்கள் மேம்பட்ட கற்பினையுடைய பதிவிரதைகள். இதற்குத் திருட்டாந்தம்,

திருவள்ளுவநாயனர் மனைவியாராகிய வாசுகி என்பவர் ஒரு நாள் கிணற்றில் நீரெடுக்கையில், நாயனர் அழைக்க, நீர்க்குடத்தை அப்படியே விட்டுவந்தன ரென்றும், திரும்பிப்போய் பார்க்கையில் அரைக்கிணற்றில் விட்டுவந்த வகையே யிருந்ததாகவும் முன் கூறப்பட்டுளது. இத்திருட்டாந்தத்தால் எத்தொழிலிலிருப்பினும் விட்டு வரவேண்டுமென்பது புலப்படுகிறது. இதன்றி,

குற்றமற்றக் கற்பினையுடைய மாதர்கள், தமது தாய்தந்தையைக்காட்டிலும், ஆசாரியர்களைக் காட்டிலும். அழகிய மெல்லிய மழலைச் சொற்களையுடைய பிள்ளைகளைக் காட்டிலும், தமது நாயகரிடத்தில் ஆசைமிகுந்து பெருமகிழ்ச்சி யடைவார்கள். சமானமில்லாத கற்பினையுடையப் புண்ணியவதிகள் தமது செல்வம் தம்மைவிட்டு விலகிப்போமென்று உரலமேலும், அம்மிமேலும், உயர்வாகிய உலக்கைமேலும், வணங்குகின்ற வாயிற்படி மேலும், முறத்தின்மேலும் ஒருபோதும் உட்கார்ந்திருக்கமாட்டார்கள். தமக்குரிய கணவரை மனம்விரும்பி வணங்காமல், அருமையாகிய விரதங்களோடு தேவபூசைகளைச் செய்யும் பெண்கள், கருமையாகிய யமதூதர்கள் தண்டிக்கும்படி முக்காலமும் எரிகின்ற தீமயமாகிய நரகத்தினிடத்தில் பொருந்தி வாழ்வார்கள். எப்பொழுதும் நாயகன் வணங்காத கடவுளையும். அவன் அனுசரியாத விரதங்களையும் அனுசரிக்கக்கூடாது.

வேதவிதிப்படியே திருமணஞ்செய்த கணவரது குற்றங்களை அறிவின்மையால் வெளியிற் சொல்லும் பெண்களும், அவரோடு கோபித்து எதிர்வார்த்தை சொல்லுகின்றப் பெண்களும் இறந்த பின்னர் முறையே நரியாகவும், நாயாகவும் பிறப்பார்கள்.

கற்புடுத் தன்பு முடித் துநாண்மெய்ப்பூசி
நற்குணநற்செய்கைபூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர்செல்வமுமுண்டாயினில்லன்றே
கொண்டாற்குச்செய்தவம்வேறு

என்னும் குமரகுருபரசுவாமிகள் திருவாக்கின்படி,

அமையப்பெற்றவர் பூர்வஜென்ம புண்ணியத்தாற் கிடைத்த தென்றும், இவ்வாறு எதிர்த்துப்பேசும் மனைவி அமைந்தவர்,

எதிர்நிற்கும்பெண்ணுமியல்பிறேழும்புஞ்
செயிர்நிற்குஞ்சுற்றமுமாகி—மயிர்நரைப்ப
முந்தைப்பழவினையாய்த்திலனுமிவைமூன்றும்
நொந்தார்செயக்கிடந்ததில்

என்ற திரிகடுகத்தின்படி,

பூர்வ ஜென்ம பாபத்தாற் கிடைத்ததென்றும் கொள்ளவேண்டும். நீங்க,

நாயகர் கோபித்தால் அவரை நெருங்கி அவருக்குமுன்னே திட்டுகின்றப் பெண்கள் மறுஜெனனத்தில் புலியாகப் பிறப்பர். கோபித்து மனஞ்சுடும்படி தன் சககளத்தியைச் சீறுகின்ற அறிவில்லாதப்பெண்கள் சுழலுகின்ற கண்ணையுடைய கோட்டானாகப் பிறந்து அழிவர். அன்னிய புருடருடைய பேரழகைக்கண்டு அவர் மீது ஆசைகொள்ளும் பெண்கள் துன்பஞ்செய் துழல்கின்றப் பேய் வடிவத்தை யடைவார்கள். தமது கணவர் பசித்திருக்க ஆசைகொண்டு அவருக்குமுன்னே உண்ணும் பெண்கள் பாவஞ் செய்கின்ற பன்றிப்பிறவியில் பிறப்பர்.

தம்மேனிநோக்கார்தலையுளரார்கைந்நொடியார்
எம்மேனியாயினுநோக்கார்தலைமகன்
தன்மேனியல்லாற்பிற.

என்றார் ஆசாரக்கோவையாரும்.

அதனால் பரபுருஷரை இச்சித்தல் கனவிலும் கூடாது என்பது பெறப்பட்டது.

தன்னைக் கடிமணஞ்செய்தக் கணவரது அருமையாகிய உயிரானது அழிந்துவிடுமாயின், அக்கினிப் பிரவேசஞ்செய்துதானும் உயிர் மாய்த்துக்கொள்வதற்கு மனம்வைக்கும் பெண்கள், நல்ல

செழுமையாகிய அசுவமேதயாகஞ் செய்த பலனைப் பெறுவார்கள் கணவனிறந்தவுடன் முதிர்ந்த செந்நிறமுடைய அக்கினியில் வீழ்ந்திறந்தப் பதிவிரதைகளை, பட்சிராஜனாகியகருடன் புற்றிலுள்ள பாம்புகளைப் பற்றிக்கொண்டு பறந்து போதல்போல, கொல்லுகின்ற யமதூதர்களுடைய கைகளினின்றும் பறித்துக்கொண்டு இனிமையாகப் பொருந்தியகணவரோடு தேவலோகம்போவார்கள் நாயகன் பாதகங்களைச் செய்தவன் என்றாலும், நாயகனோடு அக்கினியிலிறங்கினவள் கற்புடைய பெண்ணாக இருப்பாளாகில், கொல்லுகின்ற யமனானவன் தன் கண்களால் அவளைப்பார்த்தால், விடாது தொடர்ந்த அன்பினையுடைய அவளது நாயகனைக் கைவிட்டு ஓடுவான். இன்னும், வடதிசையில் விளங்குகின்ற அருந்ததியையொத்த சிறந்த கற்பினையுடைய மாதர்களதுகாந்தியானது தனது கண்களுக்குப் புலப்பட்டால், பரவிய கொழுந்தினை யுடைய நெருப்பும், வெவ்விய கிரணங்களையுடைய சூரியனும், வெண்மையாகிய சந்திரனும் ஒளிகுன்றி விளக்கமில்லாது தோன்றும். மிகுந்த அன்பினையுடைய தனது நாயகனோடு உயிர்துறந்த கெடுதலில்லாத கற்பினையுடையபெண், தனது சரீரத்திலுள்ள உரோமம் ஒன்றுக்கு ஆயிரங்கோடிகாலம் * ஆடகம் என்னும் பசிய பொன்னுலகமாகிய சுவர்க்கலோகத்தில் நாயகனோடு இன்பமனுபவித்திருப்பாள்.

கற்பினைப் பொருந்திய கனமாகிய காதணிகளை யணிந்த மகளிரை ஈன்றவரது மரபிலுள்ளாரும், பெரியதவதனையுடைய அக்கற்புடையாளை மணஞ் செய்துக்கொண்டகணவரது உயிர்போலப் பொருந்திய உறவினர் யாவரும் சுவர்க்கத்தை யடைவார்கள். இதன் கருத்தை,

மண்ணின்மேல்வான்புகழ்நட்டானுமாசில்சீர்ப்
பெண்ணினுட்கற்புடையாட்பெற்றானும்—உண்ணுநீர்க்
கூவல்குறைவின்றித்தொட்டானுமிம்மூவர்
சாவாவுடம்பெய்தினார்

என்னும் திரிகடுகத்தாலுணர்க.

சமானமில்லாத கற்பு நிலையினின்றுந் தவறிய அற்பமாகியப் பெண்கள் தமக்குரிய × மூன்று கால்வழியிற் பிறந்துள்ளார் யாவ

---

* ஆடகம் நால்வகைப் பொன்களில் ஒன்று. அவையாவன:— ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம் என்பன.

+ மூன்று கால்வழி:—தந்தைவழி, தாய்வழி, கணவர்வழி,

ரையும் தன்னகப்படுத்தி நீங்காது எரிகின்ற நெருப்பினையுடைய நரகத்தில் பயந்து நடுங்கி வாசஞ்செய்யும்படி குடியேற்றுவார்கள்.

விரும்புகின்ற கற்பினையுடைய மங்கையரது சிறிய பாதங்கள் பூமியில் எவ்விடத்தில் படிந்தபோதிலும், பக்தர்கள் அடையும் படிக்கருதுகின்ற ஸ்தலங்கள் எல்லாவற்றிலும், அவ்விடம் மேம்பட்ட புண்ணியஸ்தலம் என்று பெரியோர் கூறுவர். ஒலிக்கின்ற வெண்மையாகிய அலைகளையுடைய கங்கைமுதலாகிய தெய்வீகம் பொருந்திய சிறந்த நதிகளெல்லாம், நெருங்கிய தமது துன்பம் நீங்கக் கற்பு பொருந்திய மான்போலுங்கண்களையுடைய பெண்கள் தம்மிடத்தில் மூழ்கும்படி விரும்பும்.

புண்ணியநதிகள் தம்மிடத்தில் மூழ்கினோரது பாவங்களை யொழிக்கும் வன்மையுடையதா யிருந்தும், அந்நதிகளின் பாவம் பதிவிரதைகள் மூழ்குவதால் பரிகரிக்கப்படுமென்பர். இதனால் கற்பின் மடந்தையர் புண்ணிய நதிகளினு மேம்பட்டவர் என்பது விளங்குகின்றன. நீங்க,

அழகிய நல்ல நவரத்தினங்களால் அலங்கரித்து விளங்குகிற பெருமை பொருந்திய மாளிகைகளானாலும், கற்பினையுடையமாதர் களில்லையானால், அவ்விடத்தைப் பேய்க்கூட்டங்கள் விரும்பிவாழு கின்ற வனம் என்று பெரியோர் சொல்லுவர் இதன்கருத்தை,

நீறில்லாநெற்றிபாழ் நெய்யில்லாவுண்டிபாழ்
ஆறில்லாவூருக்கழகுபாழ்—பாரி
லுடப்பிறப்பில்லா வுடம்புபாழ்பாழே
மடக்கொடியில்லா மனை.

என்னும் ஔவையார் திருவாக்கா லுணர்க.

சுடுகின்ற வெவ்விய கிரணங்களையுடைய ஒளி வீசுகின்ற சூரிய னும், கடலிற்றோற்றுகின்ற குளிர்ச்சி பொருந்திய சந்திரிகையோடு பிரகாசிக்கின்ற சந்திரனும், தழல் விடும்படியான அக்கினியும், துதி க்கின்ற கற்புப் பொருந்திய புரிந்த கூந்தலையுடைய அழகிய பூங் கொம்பை யொத்த மாதர்மேற் பரிசிக்கையில் மனம் அஞ்சுவர், இத ற்குத் திருஷ்டாந்தம் சீதை அக்கினியிற் குளித்தபோது அக்கினி சகியாதவனாயினன் என்னும் இராமாயண சரிதத்தானும், சூரிய சந்திரர்களாகிய சுடர்களைக் கூறியதானும் அவற்றிற்கினமாகிய அக்கினியைக் கூறலாயிற்று மேலும் சுடர் மூன்று என வரும் புராண வழியையும் ஒப்புநோக்கத்தக்கது.

தன்னைச்சேர்ந்த கணவன் உயிர்விட்டலால், நீர்சிந்தும்நீலோற்பலம்போலும் அழகிய கண்களையுடைய விதவையாகிய பெண்களை உயிரை யொழித்து விழுந்துகிடக்கும் வெற்றுடல்போல, எவர்களும் பரிசித்தல் தீமையுடையது என்று நூல்வல்லோர் சொல்லுவர். சாதாரணமாய் உயிரொழிந்தப் பிரேத பரிசத்தாற் சூதகம் நேரிட்டு ஸ்நானஞ்செய்தல்போல, கைம்மை யடைந்தவரைக் கையாற் றொடுதலும் அவ்வாறேயாகும் என்பர். மாற்றுதற்கரியகலன் கழிந்தப் பெண்கள் ஒருவர் செல்லுங்கால் எதிர்ப்பட்டால் தாம் உத்தேசித்துச்சென்ற விடத்துக்குப் போகமாட்டாது திரும்புவர். மாங்கல்யத்தை யிழந்தக் கைம்பெண்களில் வணங்கித்துதித்தல் தாயை யல்லாமல் ஏனைய மாதர்களது சொல் வெவ்விய விஷத்துக் கொப்பாகுமென்று பேரியோர் கூறுவர். மேலும்,

தமது நாயகர் இறந்ததனால் விதவைத் தன்மையாகிய கற்பினையுடைய மடந்தைமார் தமது கற்பு நடையில் தவறுவாராகில் தாம் மாத்திரமே யல்லாமல், ஐயோ! தமது குலத்தினர் யாவரையும் நெருப்புப் பொருந்திய வெப்பமுடைய நரகத்தில் வீழச்செய்வர். நிழலைச்செய்கின்ற பொன்னாலாகிய மாங்கல்யத்தை நீங்கிய விதவையர் தமது கூந்தலைக் கலையாமல் முடிப்பாராயின், நெருப்பைப்போலுங் கோபம்பொருந்திய கண்களையுடைய யமதூதர்கள் அவர்கள் விரும்புங்கணவனை அவ்விடத்தில் பாசக்கயிற்றால் கட்டுவார்கள். பெண்கள் தம்மைக்கலந்த புருடன் இறந்துவிடுவானாகில் பகலில் ஓரேவேளையுணவுகொண்டு அரிய பாக்கு வெற்றிலையையும் பரவிய படுக்கையையும், மணம்வெறுத்து நீக்கி பண்மேற்படுத்துத் துயின்று, அரிய விரதங்களை யாசரித்து உயிர்வாழ வேண்டும்.

கொண்டநல்விரதத்தினைத்தயாக்கையுமிக்
கொடியனேற்கருளுநாளுளதோ

என்ற சிவப்பிரகாச சுவாமிகளின் கருத்திற்கிணங்க, காதலன் மாய்ந்திடில் தேகம் இளைப்புறுமாறு அரிய நோன்புகளியற்ற வேண்டுமென்பது புலப்பட்டது.

பிரகாசத்தைச் செய்கின்ற அழகிய மாங்கல்ய மிழந்த மாந்தர்கள், தேவதா அர்ச்சனையை ஆசையுடன் இயற்றியும், சரீரத்

தை அழுக்குண்ணும்படி வைத்தும், உள்ளிருக்கும் உயிர் நீங்காமல் இலைகளையும், கிழங்குகளையும் பசிநீங்கும் பொருட்டுக் குறைவாக உண்டும் இருக்கவேண்டியது. ஒளியை உண்டுபண்ணும் பொன்னாலாகிய மாங்கல்யத்தை யிழந்த விதவைகள் மேற்சொல்லிய விரதங்களைக் கைக்கொண்டு பெருமைதங்கிய தவத்தைச்செய்வாராயின், துதிக்கின்ற தமது கணவன் சென்ற உலகத்தையடைந்து சமானமில்லாத அருமையாகிய இஷ்டபோகங்களை அவனுடன் அனுபவித்திருப்பர். இப்படிப்பட்டவைகளில் சொல்லிய கற்பின்றன்மையையுடைய தாயாகிய உலோபாமுத்திரை என்னும் அம்மையார் உம்மிடத்தில் மனைவியாக அமைந்திருக்கின்றனர். ஆனபடியால், உம்மைத்துதித்து எமது துன்பம் நீங்கினோம் என்று நிலைபெற்ற பெரிய தவத்தையுடைய அகஸ்தியமுனிவரது மனைவியை ஆசிர்வதித்தார் பிரகஸ்பதிமுனிவர்.

ஆகையால், ஒவ்வொரு குடும்பங்களிலுமுள்ள யெண்கணிகளும் பதிசொற்கடவாது நடத்தலே மேன்மையாகிய புண்ணியங்களெல்லாவற்றிலுஞ் சிறந்ததென்று விளக்கப்பட்டது.

ஸ்திரீகள் கற்பிலக்கணம்

முற்றிற்று.

புத்தக விளம்பரம்.

—****—

T. நாராயணசாமிப்பிள்ளையும், C. கன்னையாகம்பேனியாரும்

நடத்தி வருகிற

ஸம்பூர்ண இராமநாடகம்.

12—பாகங்கள் அடங்கியது

இருவர்களும்சேர்ந்து 20-வருடகாலமாய் ஆடிவந்த பிரம்மானந்தமான விருத்தம், தேகபரவசமான தருக்கள், மனமுருகக்கூடிய பல்லவி, அனுபல்லவி, பத்தி முத்தி அளிக்கும்சரணங்கள் ஒவ்வொன்றும் பாடினோர் ஸ்ரீ ராமச்சந்திரனிடம் பேசுவது போலும் கேட்டோருடையசெவி கோடிசூரியப்பிரகாசமான பரமரக்ஷகரை நேரில் எப்போது தரிசிப்போமென பரதவிக்கும் வசனங்களும் சேர்க்கப்பட்டிருக்கிறது. விலை ரூபா—2

ஷெயார் இயற்றிய குசலவ சரித்திரம் டிராமா விலை அணா—8.

அதியுல்லாச சல்லாபலாவணி,

எரிந்தகக்ஷி எரியாதகக்ஷி.

ஐயா! ஆவலுடன் லாவணிவாசிக்கும் அன்பர்களும் இன்னும் மற்றுமுள்ளவர்களுக்கும் இன்பமோடறிவிப்ப தென்னவென்றால், சரியை, கிரியை, யோகம், ஞானம் இவைகளையும் ஆராதார ஜீவோற்பத்தி முதலான விஷயங்களையும் எளிதில் தெரிந்துகொள்ளுவதற்கு இதுவே அறியநூல். இதில் காமதகனன்பேரில் எரிந்தகட்சிபாடலும், ஒன்பது வித்வான்கள் பாடலும் ஒரே கோர்வையாகத் திரட்டி இருக்கிறது. விலை அணா—6.

அமராவதி (அல்லது) அரிவையின் அற்புதம்.

இவ்வரிய நவீன நாவலின் பெருமை மிகவும் வியக்கத்தக்கதாகும். கம்பீரமான கருத்துகளும், ஆழ்ந்த இரகசியங்களும் படித்த மாத்திரத்தில் நற்பயனடையும் மார்க்கத்தைப் பொருந்தியுள்ளது. விலை அணா—8

வெளிவந்து விட்டது!　　　　　　　　　　வெளிவந்து விட்டது!

மருங்காபுரி சமஸ்தான வித்வானுமாயும், தி. நாராயணசாமிப் பிள்ளை கம்பெனிக்கு உபாத்தியாயருமா யிருந்த வித்வான்

ஏ. கை. சிவசண்முகம் பிள்ளை அவர்களியற்றிய

ஞானசுந்திரன்.

ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதைப்படித்தால்தான் இதன் அருமை இன்னதென புலப்படும்.　　விலை அணா—12.

மும்மணி

இது படிப்பவர் மனதை பரவசமாக்கும் ஓர் அற்புதமான நாவல் இதைக் காணுமிடந்தோறும் யாவருக்கும் தெவிட்டாத இன்பத்தைக்கொடுக்கும். இதில் கற்பின் மகிமை, காதலின் பெருமை, தீயோரின் அற்புத செய்கைகள் முதலிய பல விஷயங்களும் அடங்கியிருக்கின்றன.　　விலை அணா—8.

மோகனும்பாள் (அல்லது) காதலரின் வெற்றி.

இது ஓர் நவீன துப்பறியும் நாவல். இதில் முதலிலிருந்து கடைசிவரையிலுள்ள ஆச்சர்ய சம்பவங்கள் யாவரையும் திடுக்கிடச்செய்யும்.　　விலை அணா—8

மதனசேகரன்

இது ஓர் வேடிக்கையான நாவல். மணக்கோல மாப்பிள்ளை பிணக்கோலமான பரிதாபமும், காத்திருந்தவன் மாதைப் பார்த்திருந்து கொண்டுபோனவன் சாமார்த்தியமும், சூழ்ச்சியும், சமய பேதமும், ஆலோசனையும், தைரியமும் மிகவும் புகழத்தக்கது.

கண்ணுமணி (அல்லது) காதற்கன்னி.

இது ஓர் நூதன துப்பறியும் நாவல். அறிவைப்புகட்டி நன்னெறியில் யாவரையும் தூண்டச்செய்யும் இன்றியமையாத ஓர் சிறந்த நாவல். சந்தர்ப்பானுசாரமான மேற்கோள்களுடன் வியப்பைத்தரும் பல அருமையான விஷயங்களடங்கி யிருக்கின்றது.

விலை அணா—8.

மங்கை மோகனுள்.

அறிஞர்காள்! கதாநாயகியாகிய "மங்கை மோகனுள்" தன் நந்தவனத்தில் மதிவல்லபனைக் கண்காணித்து வலிய மோகித்துக் கொடிய வரக்கனுலுங் கப்பல் வியாபாரியினுலும் பட்டக் கஷ்டத் தைநீக்கி இரக்ஷித்து பரம்பொருள் வெளிச்சமே கதாநாயகனுகிய மதிவல்லபன் பிறந்ததுமுதல் அடைந்த துன்பங்களை நீக்கி தான் மகிழ்ந்து வார்த்தையாடிய மங்கை மோகனுளை மணஞ்செய்ததற் குக் காரணம் ஈசன் கிருபையே, இவ்வரிய நாவலைப்பெற்றுக் கை யாள்பவருக்குத்தான் நன்கு விளங்கும். விலை அணு—8

மோஹன ராணி.

(ஓர் புதிய நாவல்) விலை அணு—8.

(மும்மணி) ஓர் புதிய நாவல் அணு—8

அபரஞ்சி அணு —8.

கீர்த்திசிங்க மஹாராஜன் சரித்திர மேன்னும்

கண்டிராஜன் கதை:

இது ஓர் அருமையான தமிழ் நாவல்.

இது கண்டிதேசமென்னும் சிலோனில் அனியாயக் கொடுங் கோலரசு புரிந்த கண்டி மன்னனின் சரிதை. இதைப் படிக்கப்படி க்க ஆனந்தமும், வருத்தமும் உடனுக்குடன் உண்டாகும் இந்த நாவல் வாசிப்பதற்கு மிகு நேர்த்தியாயிருக்கும் விலை அணு—8

விகட மோஹன.

ஓர் அற்புத இரசக்யானம் பொருந்தியது.

படிக்கப்படிக்க ஆனந்தமும், ஹாஸ்யநகைப்பையும் உண்டுபண் ணுவது இப்புத்தகம். உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அழகிய பட ங்களுடன் 80-பக்கங் கொண்டது. விலை அணு—8.

சிங்காரவல்லி (அல்லது) தானுகநேர்ந்த தற்கொலை.

இது மிகவும் வியப்பைத்தரும் ஓர் சிறந்த தமிழ் நாவல்:— இதில் குமித்திருக்கும் சம்பவங்கள் கல்நெஞ்சையும் கரையச்செய் யும் ஆற்றலுடையது. விலை அணு—8

விநோதவிகடன் விசித்திரப்படங்களுடன்
வெள்ளிதோறும் வெளிவரும் விகடப்பத்திரிகை.

இதில் விகட அலங்கார வியாசங்களும் கர்ணாமிர்த விகடப் பாக்களும், விகட கோர்ட், கவுன்சல், கெஜட், அகஸ்டம், சம்பாஷணைகள், விகட நாவல்கள் முதலியன இடைவிடாமல் வெளியாகி படிப்போர் மனதை குதூகலிக்கச் செய்து நகைசெய்விக்கும் இத்துடன் உள்ளூர் வெளியூர் விஷயங்களும் ராஜீய தேசீய விஷயங்களும், கைத்தொழில், விவசாயம், தந்தி பந்திகளும், கோர்ட் வர்த்தமானங்களும் இன்னும் இதர விஷயங்களும் வெளியாகின்றது. இதனை ஒவ்வொரு அபிமானிகளும் அன்புடன் ஆதரித்து இன்பமுறுமாறு கோருகின்றோம்.

நமது விநோத விகடனுக்கு தற்பொழுது 3-வது வயது நடை பெறுகிறது.

நம் விகடனை அனைவரும் எளிதில் ஆதரிக்கும் பொருட்டே இதன் சந்தாவை வெகு குறைவு செய்திருக்கின்றோம்:—

இந்தியாவிற்கும் உள்ளூருக்கும் வருடம் 1-க்கு ரூ.	4-8-0
பினாங்கு சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு வருஷம் ரூ.	5-8-0

விலாசம்:— பத்திரதிபர்.

ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார்.

'விநோத விகடன் ஆபீஸ்'

நெ. 56, நரசையர் வீதி, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை.

ஐந்தே நிமிஷத்தில் நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாய் செய்து விற்கப்பட்டு வருகிற கருப்புகள் மயிரைச் செம்பட்டை நிறமாகவும் பசுமை நிறமாகவும், சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி மயிரை விகாரப்படுத்தி விடுகின்றன. நம்முடைய தைலமோ நரைத்த மயிருக்கு பூசினால் 5-நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்னிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையு முண்டுபண்ணும். இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு வைத்துவரும்.

85689 கிரயம் புட்டி 1-க்கு ரூபா 1 0 0.

ஆ. ப. வை. மோகராஜ் வேணுகோபால பாண்டிய நாடார்.

விநோத விகடன் புத்தகசாலை,

நெ. 56, நரசையர் வீதி, பழைய வண்ணாரப்பேட்டை சென்னை.

8—மூலை கரப்பு டையல் பொன்கிலிட் ரேடியம்

ரிஸ்லெட் கெடியாரம்.

இந்த 8-மூலையுள்ள பொன்கிலிட் ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம் பார்வைக்கு வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும். சரியான காலத்தைக் காட்டும். வெகுகாலம் நன்றாய்ப்போகும். இரவில் மணி நன்றாய்த் தெரியும்.

உயர்ந்த தோல் பட்டையுடன் 9 8 0

ஷை நிக்கல்கேஸ் ரேடியம் 8-மூலையுள்ள கைகெடியாரம்தோல் பட்டையுடன் 8 0 0

ரோமசங்காரி யென்னும் தர்பார் சோப்.

இந்த சோப்பைத் தேய்த்தவுடன் தேகத்தில் எந்த இடத்திலுள்ள ரோமங்களையும் நீக்கிவிடும். இதனால் எவ்வித எரிச்சல் கறை மற்றக் கெட்ட வாசனை எதுவும் கிடையாது. இதை ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

3-சோப் அடங்கிய பெட்டி ரூபா	0	14	0
6 ,, ,, ,, ,,	1	10	0

விநோதவிகட சர்வதேள் விஷசம்ஹாரி

பட்டவுடனே விஷம் பறக்கும் அழுதவன் சிறிப்பான்.



நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும் இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. நாள் படவைப்பதால் குணம் சற்றுங்குறையாது. தேள், நட்டுவாக்கடி, செய்யான் பாம்பு எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு நீக்கக்கூடியது எண்ணிறந்த பேர் இதனால் சுகமடைந்தது பிரத்தியட்ச அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

1-பாக்கெட் அணா-8. தபால் சிலவு அணா 4. டஜன் 1-க்கு ரூபா 5.

ஆ. ப. வை. மோகராஜ வேணுகோபால பாண்டிய நாடார்.

விநோத விகடன் புத்தகசாலை, 56, நரசையர்தெருவு, மதராஸ்.

நூதன தமிழ் நாவல்கள்,

மலையைவிழுங்கிய மகாதேவன் கதை	0	6	0
வீரவர்மன் வெற்றி முதல்பாகம்	1	0	0
கல்யாணச்சந்தடியில் தாலிகட்ட மறந்த கதை	0	5	0
சுந்தரி மணவழகன்	0	6	0
வினோத விகட சிந்தாமணி முதல்பாகம்	0	8	0
வெண்டாமரையாள் (அல்லது) போர்வீரன் மனைவி	1	0	0
விகட வேசையர் மாலை	0	1	6
வினோத விகட விசித்திரத்திரட்டு	0	2	0
குமாரனைநம்பிக் கொழுநனை யிழந்தக் கொடுநீலி கதை	0	6	0
கூலிக்குத் தாலிகட்டின கதை	0	4	0
காசி ராமேஸ்வர மஜிலிக் கதை	0	12	0
பன்னிரண்டு கதைகள் என்னும் மதனகாமராஜன் கதை	0	12	0
தாசியால்மோசம்போன சந்திரசேகரன் கதை	0	4	0
கர்த்திருந்தமாதகியைப் பார்த்திருந்த வேந்தன் கொண்டுபோன மதனசேகரன்	0	8	0
காத்திருந்தவன் பெண்டை கமால்செய்து கொண்டு போனவன் கேஸ்	0	8	0
தாம்பூலம் தரிப்பதுகூடவா தப்பு	0	2	0
இவளும் சம்சாரியா (ஓர் புதிய நாவல்)	0	8	0
ஷை இரண்டாம் பாகம்	0	8	0
தோத்திரக் கீர்த்தனப்பாமாலை	0	9	0

பணத்தால்வந்த பழி	0	8	0	ஞானசுந்தரன்	0	12	0
சரச மோஹனா	0	8	0	மங்கைமோகனாள்	0	8	0
டங்கு டிங்கு ரவாமணி	0	6	0	விகட மோகனா	0	8	0
கண்டிராஜன்	0	8	0	சுயம்பிரகாசவதனி	1	0	0
காமேந்திர ஞானலோ	1	0	0	அமரநாதன்	1	4	0
குலசேகரன்	1	0	0	கமலநாதன்	2	0	0
ஜீஜாபாய்	1	4	0	சதி அனுசூயா	0	4	0

எமது விலாசம்:—

ஆ. ப. வை. மோசுராஜ வேணுகோபால பாண்டிய நாடார்

வினோத விகடன் புத்தகசாலை

56, நரசையர் தெருவு, பழைய வண்ணாரப்பேட்டை மதராஸ்.